பக்கங்கள்:15 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 29 ஞாயிற்றுக்கிழமை 14.08.2022 கதிர் 282

### இனி இது ரகசியம் அல்ல!

உள்ளூர் நண்பர் – நடமாடும் நூலகம் – நேற்றும் வழமை போல அழைப்பு எடுத்தார். எடுத்த கையோடே ஒரு கேள்வியும் தொடுத்தார்.

“அறையில் முடங்கி கிடப்பதற்கும், சிறையில் சிக்குண்டிருப்பதற்கும் என்ன ☞2

# சர்வ கட்சி அரசுக்குப் பதிலாக சர்வ கட்சி வேலைத்திட்டமாம்



## ரணில் புதிய தந்திரோபாயம்

கொழும்பு, ஓகஸ்ட் 14

சர்வ கட்சி அரசு அமைக்கும் முயற்சி ஆரம்பத்தில் எதிர்பார்த்த முன்னேற்றத்தை இப்போது தரவில்லை என அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

இதன் காரணமாக சர்வ கட்சி அரசாங்கத்துக்குப் பதிலாக சர்வ கட்சி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதியால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது. ☞2

## ஆளில்லா கண்காணிப்பு விமானம் நாடாளுமன்ற வாவியில் வீழ்ந்தது!

### விமானப் படைக்கு அரைக் கோடி ரூபா இழப்பு



நாடாளுமன்றத்தின் பாதுகாப்பிற்காக பயன்படுத்தப்பட்ட ஆளில்லா விமானம் (ட்ரோன்) நாடாளுமன்றத்தைச் சூழவுள்ள தியவன்னா ஓயாவில் வீழ்ந்ததில் சுமார் ஐம்பது லட்சம் ரூபா ☞2

## எரிபொருளுடன் பவுஸர் குடை சாய்ந்து விபத்து!



நேற்று அதிகாலை 2.00 மணியளவில் களனி, ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே மேம்பாலத்தின் மீது பயணித்த எரிபொருள் பவுஸர் ஒன்று சாரதிக்கு ஏற்பட்ட தூக்கம் காரணமாக பாலத்தில் இருந்து கீழுள்ள வீதிக்கு குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

அதில் இருந்த எரி ☞2

## புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடையை நீக்கியது இலங்கை அரசு

### ரணில் அதிரடி நடவடிக்கை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை அரசு, சில புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனி நபர் அமைப்புக்கள் மீதான தடையை அதிரடியாக நீக்கியுள்ளது.

அதற்கமைய உலகத் தமிழர் பேரவை மற்றும் அதன் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் மீதான தடையை இலங்கை அரசு நீக்கியுள்ளது.

பிரிட்டன் தமிழர் பேரவை, கனடா தமிழ்க் காங்கிரஸ் ஆகிய அமைப்புக்கள் மீதான தடையையும் இலங்கை ☞2

## அவசரகால விதிகளை மீள்பரிசீலனை செய்யுமாறு உயர்நீதிமன்றம் பரிந்துரை

அவசரகால சட்ட விதிமுறைகள் குறித்து மீள் பரிசீலனை செய்யுமாறு உயர் நீதிமன்றம் சட்ட மா அதிபருக்கு அறிவித்துள்ளது.

அத்துடன் பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் கீழ் ஜனாதிபதியால் வெளியிடப்பட்டுள்ள அவசரகால சட்ட அமுலாக்கத்திற்கான 2289/07 ஆம் இலக்க வர்த்தமானியை வலுவிழக்க செய்வதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 3 அடிப்படை உரிமை மீறல் மனுக்களையும் விசாரணைக்கு ஏற்பதாகவும் உயர் நீதிமன்றம் அறிவித்தது.

நீதியரசர் விஜித் மலல்கொட தலைமையில் அச்சல வெங்கப்புலி, மஹிந்த சமயவர்தன ஆகிய நீதியரசர்களை உள்ளடக்கிய குழாம் நேற்று முந்தினம் இந்த மனுக்களை பரிசீலனைக்கு ☞2

## அனைத்துக் கடவுளரின் ஆசீர்வாதத்துடனும் நெருக்கடுக்கு அடுத்த ஆண்டில் தீர்வு கிட்டும்

### கண்டி தலதா மாளிகை பெரஹறவில் ரணில் உரை



சவால்களை வெற்றிக்கொள்ள அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அனைத்துக் கடவுளரின் ஆசீர்வாதத்துடனும் எதிர்வரும் ஆண்டுக்குள் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும் என்பதை முழுமையாக நம்புகிறேன்.

– இப்படி ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்க தெரிவித்தார்.

கண்டி தலதா மாளிகை பெரஹறவின் நிறைவு நாளான நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அந்நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ☞2

## ஹோட்டலில் கோட்டா முடக்கம் பாதுகாப்புக் காரணங்களுக்காக

### தாய்லாந்துப் பொலிஸார் அறிவுறுத்தல்

தாய்லாந்தில் தங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை அவர் தங்கியுள்ள ஹோட்டலை விட்டு வெளியேற வேண்டாம் என பாங்கொக் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர் என ஆதாரங்களை மேற்கோள்காட்டி ‘பாங்கொக் போஸ்ட்’ நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

கோட்டாபயராஜபக்ஷ மற்றும் அவரது குழுவினர் பயணித்த பிரத்தியேக விமானம் தாய்லாந்தின் ஃபூகெட்டில் தரையிறங்கத் திட்டமிடப்பட்டிருந்ததாகவும், ☞2

## கடல் கண்காணிப்புக்கு விமானம் இலங்கைக்கு இந்தியா வெகுமதி



இலங்கை அரசின் கோரிக்கையை ஏற்று கடல்சார் கண்காணிப்பு விமானத்தை இந்தியா வழங்கியுள்ளது. இந்திய கடற்படைக்கு சொந்தமான டோனியர் - 228 கடல்சார் கண்காணிப்பு விமானமே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது. ☞2

## ஒரு லட்சம் மெட்ரிக் தொன் மசகு எண்ணெய் கிடைத்தது

ஒரு லட்சம் மெட்ரிக் தொன் மசகு எண்ணெய் ஏற்றிய கப்பல் நேற்றிரவு கொழும்பை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்பட்டதாக நேற்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

இந்நிலையில், இன்று அதன் மாதிரி எடுக்கப்பட்டு தரம் பிரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஒருலட்சத்து இருபதாயிரம் மெட்ரிக் தொன் மசகு எண்ணெய் தாங்கிய மற்றுமொரு கப்பல் எதிர்வரும் 23 முதல் 29ஆம் திகதிக்குள் நாட்டை வந்தடையும் எனவும் அவர் ☞2

## இனி இது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேறுபாடு?" – என்று விடுகதை போடுபவர் போலக் கேட்டார்.

எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. 'அது.....!' அன்று இழுத்தேன். அவரே பதிலும் சொன்னார்.

"உள்ளே பூட்டிக் கொண்டு சுருண்டு இருப்பது அறைக்குள். வெளியே பூட்டப் பட்டிருப்பது சிறைக்குள்...." – என்று ஒரு மகாதத்துவத்தையே வெகு ஸிம்பிளாக எடுத்துரைத்தார் அவர். நான் அந்த நண்பரின் மேதாவிலாசம் கண்டு திகைத்துப் போனேன்.

"பாதுகாப்புச் செயலாளராக இருந்து உங்களை உட்பட எத்தனை ஆயிரம் பேருக்குக் கண் மூடிக்கொண்டு தடுப்பு காவல் உத்தரவுகளைப் போட்டு அவர்களைச் சிறையில் வாட வைத்தவர், இன்று தாமே தமது அறைக் கதவை மூடிக்கொண்டு தமக்குத் தாமே சிறை வைக்க வேண்டிய துர்லபம் ஏற்பட்டுள்ளது. இதுதான் விதியின் வேடிக்கை" – என்றார் அந்த நண்பர்.

"அவரேசிறைப்பிடித்து, இலங்கையில் தடுத்து வைத்திருக்கும் புலிகள் பிரமுகர் கேபியின் சரணாலயமே அவர் இப்போது பதுங்கி இருக்கும் தாய்லாந்துதான். அவரிடம் (கே.பியிடம்) கேட்டிருந்தால் இவருக்குத் தாய்லாந்தில் எங்கு, எப்படிப் பதுங்கி இருந்து, அஞ்ஞாதவாசம் செய்யலாம் என்பதையும் சொல்லித் தந்திருப்பார். It's not too late. இப்போது கூட அவர் கே.பி.யுடன் தொடர்பு கொண்டு சாதகமான வழிவகைகளைப் பண்ணிக் கொள்ளலாம்" – என்றார் என் நண்பர். வாழ்க அவர் முயற்சி.

★ ★ ★

நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் அரசியலுக்கு பொருத்தமற்றவர். அரசியல் செய்வதற்கான சுத்து மாத்துகள் விளங்காத இவர், அரசியலில் தாக்குப்பிடிப்பது பெரும் கஷ்டம்தான். இப்போதும் கூட 'வெளுத்ததெல்லாம் பால்' என்ற மாதிரித் தானும் விடயங்களை நம்பி, அதனைத் தமிழ் மக்களுக்கும் அப்பாவித்தனமாக முன் வைத்திருக்கிறார் அவர்.

தடுப்பு காவலில் இருக்கும் 46 தமிழ் அரசியல் கைதிகள் விரைவில் விடுவிக்கப்படுவர் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கூறிய கருத்தை அப்படியே நம்பி எமக்கு – தமிழ் மக்களுக்கு – உரைக்கின்றார் விக்னேஸ்வரன்.

அவருக்கு நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவைத் தெரியவில்லை; புரியவில்லை.

நல்லாட்சி அரசின் போதும் நீண்ட காலம் இதேபோல நீதி அமைச்சராக இருந்தவர் விஜயதாஸ ராஜபக்ஷதான்.

"அந்த அரசின் ஆரம்ப காலத்தில், தமிழ் தரப்புடன் இருந்த நல்லுறவில், தமிழ் அரசியல் கைதிகள் எல்லோரையும் விடுவிக்க அற்புதமான வாய்ப்பிருந்தது. ஆனால் இனவாதத்தின் உச்சியில் நின்றபடி விடயங்களை எடை போட்ட விஜயதாஸ ராஜபக்ஷ அம்முயற்சிகளுக்குக் குறுக்கே நின்றார். எந்தக் கைதியை விடுவிப்பதற்கான பரிந்துரையும் அவரைத் தாண்டி நகரவே இல்லை.

அந்த வேளையில் நீதிமன்றங்கள் மூலமே, அரச தரப்பு சட்டத்தரணிகள் அல்லது சட்டமா அதிபரின் பிரதிநிதிகளைச் சமாளித்தே, காவலில் இருந்த கைதிகள் வழக்குகள் முடிவுறுத்தப்படுவதன் மூலம் நீதிமன்ற வாயிலாக விடுவிக்கப்பட்டனர்.

இப்போதும் அதே வாய்ச்சவடால்தான் விடுகிறார் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ. ஒரே ஒரு வித்தியாசம். அவர் விடும் கயிறை விழுங்குவதற்கு ஒருவர் வந்திருக்கிறார். அவ்வளவுதான்.

– மின்னல் –

## ஒரு லட்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறிப்பிட்டுள்ளார்.

இந்த இரண்டு மசகு எண்ணெய் கப்பல்களும் ரஷ்யாவில் இருந்து அனுப்பப்படுகின்றன என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்

## சர்வ கட்சி அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் உள்ள பல கட்சிகள், கட்சிகளாக அரசாங்கத்துடன் இணைந்து கொள்ள விரும்பாத காரணத்தால் சர்வ கட்சி அரசு அமைக்கும் முயற்சி பின்னடைவு கண்டுள்ளது எனக் கூறப்பட்டது.

எனினும், அரசாங்கத்துடன் இணைந்தவுடன், அரசியல் கட்சிகளாக இல்லாவிட்டாலும், கட்சிகளிலிருந்து தனித்தனியாக வந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட உள்ளன.

அமைச்சர்கள் அடுத்த வாரம் பதவியேற்க உள்ளனர் எனவும் தெரியவருகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் உட்பட பதினைந்துக்கும் மேற்பட்ட எம்.பிக்கள் அரசாங்கத்தில் இணையவுள்ளனர் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## புலம்பெயர் அமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசு நீக்கியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இந்தத் தடை நீக்கப்பட்டுள்ளது.

## அனைத்துக் கடவுளரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில் –

பெருமைமிக்க, பொறுப்பினை நிறைவேற்றியுள்ளமைக்கு முதலில் கண்டி தியவடன நிலமேவிற்கு நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இரண்டு வருட காலத்திற்கு பின்னரே கண்டி தலதா மாளிகை பெரஹராவை வெகுவிமர்சையாக நடத்த முடிந்தது.

குறிப்பாக கண்டி தலதா மாளிகை பெரஹரவில் சகல மதத்தவர்களும் கலந்துகொள்வார்கள். இலங்கையின் சம்பிரதாயத்தின் ஒரு பகுதியாகவே கண்டி பெரஹர இடம்பெறுகிறது. நாட்டை பாதுகாப்பது பிரதான வேண்டுதலாகக் காணப்படுகிறது.

மேலும், பொருளாதார நெருக்கடியினைஎதிர்க்கொண்டுள்ளசூழ்நிலையில் கண்டி பெரஹர இடம்பெறுவது கடவுளின் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளும் ஒரு வாய்ப்பாக கருதுகிறேன். நெருக்கடியான சூழல் அனைவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டும். இதனை விட சவால்மிக்க காலம் தோற்றம் பெற முடியும்.

சகல சவால்களில் இருந்தும் மீண்டெழ வேண்டும். சிறந்த கொள்கையுடன் நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்வதற்கு அனைவரும் தயாராக வேண்டும். தலதா மாளிகை உட்பட நாட்டின் சகல மதங்களின் செயற்பாடுகளும் எமக்கு ஆசீர்வாதத்தை முழுமையாக வழங்கும் என்பதை நம்புகிறேன்.

அனைத்து, கடவுளரின் ஆசீர்வாதத்துடன் எதிர்வரும் ஆண்டுக்குள் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியும் என்பதை முழுமையாக நம்புகிறேன். சவால்களை வெற்றிக்கொள்ள அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். – என்று குறிப்பிட்டார்.

## கடல் கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புதிய விமானம் ஒன்றை தயாரிக்க சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகும் என்பதால், ஆரம்ப இரண்டு ஆண்டுகளுக்கு விமானத்தை இலவசமாக வழங்க ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, முதல் இரண்டு ஆண்டுகளின் முடிவில் புதிய டோனியர் – 228 கடல்சார் கண்காணிப்பு விமானத்தை இலவசமாக வழங்க இந்திய அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்தக் கடல்சார் கண்காணிப்பு விமானம் நாளை 15 ஆம் திகதி தனது கடற்படைக்குள் உள்வாங்கப்படவுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

# ஆஸி. செல்ல முயற்சித்த 701 பேர் இதுவரை கைது



இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக ஆஸ்தி ரேலியாவுக்குப் படகு மூலம் செல்ல முயற்சித்த 701 பேர் இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படை தெரிவித்துள்ளது.

அதேநேரம், ஆஸ்திரேலியா செல்வதற்கான தயார்ப்படுத்தல்களில் ஈடுபட்ட 210 பேர், நாட்டின் சில பாகங்களில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கப்டன் இந்திக்க டி சில்வா ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சட்டவிரோதமாக இந்தியா செல்ல முற்பட்ட 113 பேர் இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# விரைவில் இலங்கை திரும்புவார் கோட்டா

## அடித்துக் கூறுகின்றது 'மொட்டு'



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரைவில் நாடு திரும்புவார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக்க அநுருத்த தெரிவித்தார்.

'இலங்கையில் இருந்து மாலைதீவு சென்ற கோட்டாபய ராஜபக்ஷ, அங்கிருந்து சிங்கப்பூர் சென்றார். தற்போது தாய்லாந்து சென்றுள்ளார். எதற்காக இவ்வாறு சுற்றித் திரிகின்றார். அவருக்கு இலங்கை வருவதற்கு உகந்த சூழ்நிலை இல்லையா?' என்று ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவ்வாறு எந்தத் தடையும் இல்லை. அவர் விரும்பிய நேரத்தில் நாடு திரும்பலாம். அவருக்கென சில பணிகள் இருக்கலாம். அந்தப் பணிகள் முடிவடைந்த பின்னர், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிச்சயம் நாடு திரும்புவார். இலங்கைதான் அவரின் நாடு – என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக்க அநுருத்த மேலும் குறிப்பிட்டார்.

## எரிபொருளுடன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொருள் கையிருப்பு வேறு ஒரு பவுஸர் வாகனத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தின் போது பவுசர் சாரதி மாத்திரமே அதில் பயணித்துள்ளார். காயமடைந்த சாரதி சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் பேலியகொட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆளில்லா கண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக விமானப்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விமானம் பயன்படுத்த முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த ஆளில்லா விமானம் இலங்கை விமானப்படைக்குச் சொந்தமானது.

கடந்த மாதம் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர் ஆரம்ப விழாவின் போது உயர் பாதுகாப்புக்காக விமானம் ஈடுபடுத்தப்பட்டிருந்த வேளையில் அது திடீரென தியவன்னா ஓயாவில் விழுந்து விபத்துக்குள்ளானது.

விமானத்தின் பட்டரி வலுவிழந்ததால் அது விபத்துக்குள்ளானதாக தற்போதைய விசாரணையில் தகவல் வெளியாகியுள்ளது. மேலும், விமானத்தைப் பத்திரமாகத் தரையிறக்க விமானப்படை வீரர்கள் எவ்வளவோ முயன்றும் அது தோல்வியில் முடிந்ததாகத் தெரியவந்துள்ளது.

தியவன்னா ஓயாவில் விபத்துக்குள்ளான ஆளில்லா விமானம் கடற்படையின் சுழியோடிகள் குழுவினரால் அண்மையில் மீட்கப்பட்டது.

## அவசரகால விதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எடுத்துக்கொண்டு இதனை அறிவித்தது.

மனுதாரர்கள் ஜனாதிபதியால் வெளியிடப்பட்டுள்ள அவசரகால விதிமுறைகள் அடங்கிய வர்த்தமானியை இடைநிறுத்துவதற்கான இடைக்கால உத்தரவை பிறப்பிக்குமாறு கோரியுள்ள நிலையில், அவ்வாறான இடைக்கால உத்தரவொன்றினை தற்போதைய சந்தர்ப்பத்தில் விடுப்பதில்லை என உயர் நீதிமன்றம் அறிவித்தது.

எனினும் அவசர கால சட்ட விதிமுறைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் மீள் பரிசீலனை செய்யுமாறும், அவ்வாறு செய்யும் போது ஏதேனும் திருத்தங்களை முன்னெடுப்பதாயின் அது குறித்து உயர் நீதிமன்றுக்கு இரு வாரங்களுக்குள் அறிவிக்குமாறும் சட்டமா அதிபருக்கு நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டது.

## ஹோட்டலில் கோட்டா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால் பாதுகாப்புக் காரணங்களால் விமானம் முவாங் சர்வதேச விமான நிலையத்திற்குத் திருப்பி விடப்பட்டதாகவும் 'பாங்கொக் போஸ்ட்' செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

முவாங் சர்வதேச விமான நிலையத்திற்கு கோட்டாபய ராஜபக்ஷ வந்தடைந்த பின்னர், தாய்லாந்துப் பாதுகாப்புப் படையினர் அவரை பாங்கொக்கில் உள்ள ஓர் அறியப்படாத ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றனர் எனக் கூறப்படுகின்றது.

ராஜபக்ஷவின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அவர் தங்கியிருக்கும் ஹோட்டலில் தாய்லாந்துப் பாதுகாப்புப் பணியாளர்கள் சிவில் உடையில் நிறுத்தப்பட்டுள்ளனர் எனவும் அந்தச் செய்தித்தாளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# லண்டன் தேம்ஸ் நதியில் சடலமாக மீட்கப்பட்ட இலங்கை இளைஞன்!

இங்கிலாந்தின் தலைநகர் லண்டனில் உள்ள தேம்ஸ் நதியில் கரையொதுங்கிய நிலையில் கடந்த வியாழக்கிழமை மீட்கப்பட்ட உடல் இலங்கையரது எனத் தெரியவந்துள்ளது.

அகில கால்லகே என்ற சிங்கள இளைஞனின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

நதியில் நீச்ச லில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது நடந்த திடீர் விபத்தில் இந்த இளைஞன் உயிரிழந் துள்ளார் எனக் கூறப்படுகிறது. இந்த மரணம் தற் கொலையோ அல்லது கொலையோ அல்ல என பிரித்தானிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக இலங்கை இளைஞனின் உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் டெஸ்பரோ செயிலிங் கழகம் அருகே ஆண் ஒருவர் தண்ணீருக்கு அடியில் சென்றார் எனவும், அவர் மீண்டும் வெளியே தென்படவில்லை எனவும் நேரில் பார்த்தவர்கள் தகவல் வழங்கியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து தண்ணீருக்கு அடியில் காணாமல் போன நபரை தேடும் பணியில் சுழியோடிகள் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் வியாழக்கிழமை மாலை சர்ரேயில் உள்ள படகு கிளப்பில் அருகில் உள்ள தேம்ஸ் நதியின் நீர்வழிப்பாதையில் ஆண் ஒருவரின் உடல் கரையொதுங்கியதும் அது தொடர்பில் அவசர சேவை மையத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தேம்ஸ் நதி கரையில் இருந்து உடலை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.











## மணமகன் விபரம்

**பிறந்த திகதி**-1988.06.16
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-புனர்பூசம் 1
**கி.பா**-68
**செவ்**-8ல்
**தகைமை**-TELECOM ENG
**தொழில்**-UK,PR
**எதிர்பார்ப்பு**- இலங்கை மணமகள் A/L படித்தவர் OK

**பிறந்த திகதி**-20.11.1990
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-மூலம் 2
**கி.பா**-44
**செவ்**-6ல்
**தகைமை**-G.C.E A/L
**தொழில்**-SWISS PR
**எதிர்பார்ப்பு**- A/L படித்த மணமகள் SWISS இலங்கை

**பிறந்த திகதி**-14.09.1998
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-கார்த்திகை 2
**கி.பா**-26
**செவ்**-8ல்
**தகைமை**-B,SC ELECTICAL ENG
**தொழில்**-U.S.A PR
**எதிர்பார்ப்பு**- ENG, DOCTOR பட்டதாரி U,S,A+ CEYLON மணமகள்

**பிறந்த திகதி**-16.07.1990
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-பரணி 2
**கி.பா**-25
**செவ்**-2ல்
**தகைமை**-H.N.D.E ELECTRICAL ENG
**தொழில்**-U.S.A PR
**எதிர்பார்ப்பு** - பட்டதாரி மணமகள் U.S.A+ இலங்கை

**பிறந்த திகதி**-13.08.1979
**மதம்**-இந்து
**ஜாதி**-P ஆண்
**நட்சத்திரம்**-அச்சுவினி
**கி.பா**-48
**செவ்**-5ல்
**தகைமை**-B.SC M.SC
**தொழில்**-. UK PR
**எதிர்பார்ப்பு** - UK+ CEYLON மணமகள்

**பிறந்த திகதி**-22.12.1980
**மதம்**-இந்து
**ஜாதி**-P ஆண்
**நட்சத்திரம்**-திருவாதிரை
**கி.பா**-24
**செவ்**-6ல்
**தகைமை**-B.COM, M.B.S UK
**தொழில்**-UK மணமகள்
**எதிர்பார்ப்பு**- UK OR EUROPE மணமகள்

**பிறந்த திகதி**-14.04.1995
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-அத்தம்
**கி.பா**-57
**செவ்**-1ல்
**தகைமை**-B.COM
**தொழில்**- COMPANY
**எதிர்பார்ப்பு**- அரசசேவ மணமகள்

**பிறந்த திகதி**-14.03.1988
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-திருகோணம்
**கி.பா**-36
**செவ்**-6ல்
**தகைமை**-G.C.G A/L
**தொழில்**-சொந்த நிறுவனம்
**எதிர்பார்ப்பு**- A/L படித்த மணமகள் காரைநகர் முன்னுரிமை

## மணமகள் விபரம்

**பிறந்த திகதி**-07.08.1985
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-அச்சுவினி 5' 5"
**கி.பா**-35
**செவ்**-சூரி 5ல்
**தகைமை**-MBBS
**தொழில்**-DOCTOR
**எதிர்பார்ப்பு**- DOCTOR ENG BANK MANGER ACCOUTANT

**பிறந்த திகதி**-04.06.1976
**மதம்**-இந்து
**ஜாதி**-V சைவம்
**நட்சத்திரம்**-மகம் 3
**கி.பா**-28
**செவ்**-9ல்
**தகைமை**-H.N.D.A
**தொழில்**-.ஆசிரியர்
**எதிர்பார்ப்பு**- அரசசேவை தனியார் மணமகன்

**பிறந்த திகதி**-01.06.1996
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-அனுசம்
**கி.பா**-14
**செவ்**-11ல்
**தகைமை**-B.SC
**தொழில்**-COMPANY
**எதிர்பார்ப்பு**- DOCTOR, ENG மணமகன்

**பிறந்த திகதி**-10.04.1987
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-மகம்
**கி.பா**-07
**செவ்**-5ல்
**தகைமை**-M.B..B.S
**தொழில்**- DOCTOR
**எதிர்பார்ப்பு**- DOCTOR மணமகன்

**பிறந்த திகதி**-07.08.1985
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-அச்சுவினி 5' 6'
**கி.பா**-35
**செவ்**-5ல்
**தகைமை**-MBBS
**தொழில்**- DOCTORR
**எதிர்பார்ப்பு**- DOCTOR ENG அரச வங்கி மனேச்சர் மணமகன்

**பிறந்த திகதி**-13.06.1991
**மதம்**-இந்து
**ஜாதி**-GURUGULAM
**நட்சத்திரம்**-மிருகசீரிடம் 5
**கி.பா**-45
**செவ்**-3ல்
**தகைமை**-B.A
**தொழில்**- LAND OFFICER
**எதிர்பார்ப்பு**- அரசசேவை மணமகன்

**பிறந்த திகதி**-26.11.1992
**மதம்**-இந்து
**ஜாதி**-K பெண்
**நட்சத்திரம்**-மூலம்
**கி.பா**-75
**செவ்**-7ல்
**தகைமை**-G.C.G. A/L
**தொழில்**- COMPANY
**எதிர்பார்ப்பு**- அரசசேவை தனியார் மணமகன்

**பிறந்த திகதி**-17.02.1986
**மதம்**-இந்து
**ஜாதி**-P பெண்
**நட்சத்திரம்**-ரோகிணி 7
**கி.பா**-22
**செவ்**-6ல்
**தகைமை**- H.N.D.A, B.COM
**தொழில்**- D.O அரசசேவை
**எதிர்பார்ப்பு**- அரசசேவை தனியார் மணமகன்

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.



















காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ரணிலின் காய் நகர்த்தல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை அரசு, சில புலம்பெயர் அமைப்புகள் மற்றும் தனி நபர்கள் மீதான தடையை அதிரடியாக நீக்கியிருக்கின்றது.

பிரிட்டன் தமிழர் பேரவை, கனடா தமிழ்க் காங்கிரஸ் போன்ற அமைப்புகளினதும், சுரேன் சுரேந்திரன் போன்ற முக்கிய பிரமுகர்களினதும் பெயர்கள் இந்தத் தடை நீக்கப்பட்டியலில் இடம் பெற்றிருக்கின்றன என்று முற்கொண்டு வெளியான செய்திகள் தெரிவிக்கின்றன.

ரணில் அரசின் இந்த அதிரடி நடவடிக்கையின் பின்னால் புதைந்து கிடக்கும் நோக்கம் குறித்துப் பல தரப்புகளினாலும் பலவிதமான கருத்துகள் கூறப்படுகின்றன. அவை குறித்து உடனடியாக ஒரு முடிவுக்கு வரமுடியாது. எனினும் இந்தத் தடை நீக்க நடவடிக்கையைத் தொடர்ந்து ரணிலின் அரசு எடுக்கக் கூடிய தொடர் செயற்பாடுகள் நிலைமையைத் தெளிவுபடுத்தும் என்று நம்பலாம்.

வெளிநாட்டில் வதியும் புலம்பெயர் தரப்புகளின் நிதி முதலீடுகளை இங்கு தருவிப்பதன் மூலம் தற்போது எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க முடியும் என்ற கருத்தியல் பல மட்டங்களில் சாதகமான நம்பிக்கையாகக் கருதப்படுகின்றது.

பலமான புலம்பெயர் தமிழர் சமூகத்தின் நம்பிக்கையைப் பெற்று, அந்த சமூகத்தின் கவனத்தை ஈர்த்து, முதலீடுகளை இங்கு வரவைப்பதற்கான எத்தனமாக – ஆரம்ப நடவடிக் கையாக – ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தத் தடை நீக்க நடவடிக்கையை முன்னெடுத்திருக்கின்றார். இதனை சாதகமான சமிக்ஞையாக புலம்பெயர் சமூகம் பார்க்க வேண்டும் என்று ரணிலுக்கு ஆதரவான தரப்புகள் வியாக்கியானம் கூற முயலுகின்றன.

அதேசமயம், அடுத்த மாதத்தில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தில் கடும் நெருக்குவாரங்களை எதிர்கொள்ளப் போகும் ரணிலின் அரசு, களநிலைமையைத் தனக்குச் சாதகமாகத் தளர்வுறப் பண்ணும் காய் நகர்த்தலை இப்படி ஆரம்பித்திருக்கின்றது, அதனைக் கண்டு தமிழர் தரப்பு – குறிப்பாக புலம்பெயர் மக்கள் – மற்றும் சர்வதேசத் தரப்புகள் இந்த ஏமாற்று நடவடிக்கைக்கு இலகுவாக எடுபட்டு விடக் கூடாது என்று தமிழர் தரப்பின் நோக்கர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

புலம்பெயர் தரப்புகள் மீதான தடை நீக்கம் மட்டுமல்ல, அவற்றையும் தாண்டி, அத்தரப்புகளையும் உட்படுத்தி இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான புதிய திட்டம் ஒன்று – முன்னெடுக்கப்படுவதாக ரணிலின் அரசு, ஜெனிவாகக் கூட்டத்துக்கு முன்னர் இந்த நடவடிக்கையை முன்னிறுத்தி பம்மாத்துக் காட்டும் என்றும் –

அந்த வழமையான ஏமாற்று நடவடிக்கையைக் காட்டியே, ஜெனிவாவில் மீண்டும் ஒரு இரண்டு வருட அவகாசத்தை – கால நீடிப்பை – இலங்கை பெறுவது தான் ரணில் அரசின் திட்டம் என்றும் –

அத்தரப்புகள் சுட்டுகின்றன. நிராகரிக்கப்பட முடியாத தந்திரோபாயங்கள் இவை.

2005 ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு வாய்ப்புக் கிட்டாமல் போகும் விதத்தில் புலிகள் காய் நகர்த்தியமைக்குப் பிரதான காரணம், ரணிலின் முன்னைய அரசு வைத்திருந்த சர்வதேச வலைப் பின்னல் என்ற தந்திரம் தொடர்பிலான புலிகளின் நியாயமான சந்தேகம்தான்.

உள்ளூர் அரசியலில் செல்வாக்கைக் கோட்டை விட்டாலும், சர்வதேச அரசியலைத் தமக்குச் சாதகமாக மாற்றும் விவகாரத்தில் ஜனாதிபதி ரணில் பெரும் கில்லாடி. அவரோடு அரசியல் காய்களை நகர்த்துவதில் தமிழர் தரப்பு அதீத எச்சரிக்கையாக இருப்பது அவசியம்.

## கைவிடப்பட்ட எண்ணெய்க் களஞ்சியங்களை பயன்படுத்துவதற்கு ஆலோசனை முன்வைப்பு!

### பந்துல குணவர்தனவால்



கொழும்பு, ஒக. 14

பொலன்னறுவை மற்றும் வெலிகந்தை பிரதேசங்களில் கைவிடப்பட்டுள்ள எண்ணெய்க் களஞ்சியங்களை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து மற்றும் தகவல், ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன இதற்கான ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

பொலன்னறுவை ரயில் நிலையம், வெலிகந்தை ரயில் நிலையப் பகுதிகளில் அமைச்சர் பந்துல குணவர்தன கண்காணிப்பு விஜயமொன்றை கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்டார்.

இதன்போது, அங்கு கைவிடப்பட்டிருந்த இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான எண்ணெய்க் களஞ்சிய தாங்கிகள் தொடர்பாகக் கவனம் செலுத்தியதுடன், அவற்றை மீளச் சீரமைத்து பயன்பாட்டுக்குக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

தற்போதைக்கு புதர்கள் மற்றும் காட்டுக்குள் கைவிடப்பட்டுள்ள மேற்படி தாங்கிகளில் பொலன்னறுவை அருகே மூன்று லட்சம் லீற்றர் எரிபொருள் மற்றும் வெலிகந்தை அருகே இரண்டு லட்சத்து எழுபதாயிரம் லீற்றர் எரிபொருள் சேமித்து வைக்க முடியும் என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

## ஞான அக்காவின் வீட்டுக்கு தீவிர இராணுவப் பாதுகாப்பு



அநுராதபுரம் ஞான அக்காவின் வீடு மற்றும் விகாரைக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் அண்மையில் எரிந்து நாசமான அவரது வீட்டைப் புனரமைக்கும் பணியிலும் இராணுவ வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர் என இரகசிய தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அநுராதபுரத்தில் ஏரிக்கரைக்கு அருகில் அமைந்துள்ள ஞான அக்காவின் வீடும் கடந்த மே மாதம் 9ஆம் திகதி சில குழுவினரால் தீக்கிரையாக்கப்பட்டது. அவரது விகாரை மற்றும் ஹோட்டலும் தாக்கப்பட்டு கடுமையாகச் சேதப்படுத்தப்பட்டன.

பல இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் சக்திவாய்ந்த அரசியல்வாதிகள் அவரிடம் இருந்து சோதிட ஆலோசனைகளையும் பல்வேறு பாதுகாப்புகளையும் தொடர்ந்து பெற்று வருகிறார்கள்.

அவரது விகாரை, வீடு, ஹோட்டல் ஆகியவற்றுக்கு மே மாதம் 9ஆம் திகதி முதல் இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அவரது வீட்டுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள போதிலும், வீட்டை புனரமைக்கும் பணியை இராணுவம் மேற்கொள்ளவில்லை என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஹான் பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் மாவட்டத்தில் தீ வைக்க முயற்சிகள் நடைபெற்ற இடங்கள் அனைத்திலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஷெஹான் சேமசிங்க, எஸ்.எம்.சந்திரசேன, சன்ன ஜயசுமனவின் வீடு மற்றும் மேயரின் வீட்டுக்குத் தொடர்ந்து இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனினும் அவர்களின் வீட்டை நிர்மாணிப்பதற்காக இராணுவம் களமிறக்கப்பட்டுள்ளனர் என வெளியான செய்தி பொய்யான செய்தி என இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## மக்கள் போராட்டம் தோற்கவேயில்லை!




காலிமுகத்திடல் இளைஞர்களின் போராட்டம் தோற்கவில்லை என்று சரத் பொன்சேகா எச்சரித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வின் போது அவர் கருத்து தெரிவிக்கையிலே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது போராட்டம் தோற்றுவிட்டதாக பலரும் மனப்பால் குடிக்கின்றனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களை தேடித் தேடிக் கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவாளர்கள் போராட்டம் தோற்றுவிட்டது, பொருளாதார நெருக்கடி தீர்ந்து விட்டது என்று கொண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் இளைஞர்களின் போராட்டம் காரணமாகத் தான் நாட்டில் சிற்சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நாளைய சந்ததிக்குத் தேவையான மாற்றங்கள் தொடர்பில் சிந்திக்கப்படுகின்றது.

அந்த வகையில் போராட்டம் தோற்றுப் போகவில்லை. அது வேறு வடிவில் முன்னெடுக்கப்படும். – எனத் தெரிவித்துள்ளார்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# தமிழினப் படுகொலைக்கான விளைவை அனுபவிக்கின்றார் கோட்டாபய ராஜபக்ஷ!

## கோடீஸ்வரன் சுட்டிக்காட்டு

(பாறுக் ஷிஹான்)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமிழ் மக்களின் இனப்படுகொலையை அரங்கேற்றிய முக்கிய காரண கர்த்தாவாக இருந்தமையால் சொந்த நாட்டில் கால்பதிக்க முடியாமல் சிங்கள மக்களால் துரத்தி அடிக்கப்பட்டு இன்று ஒவ்வொரு நாடாகத் தத்தளித்து திரிகின்றவராக இருக்கின்றார்.எந்தவொரு நாட்டிலும் அவருக்கான புகலிடம் மறுக்கப்படுகின்ற நிலைமை தொடர்கின்றது.இனப்படுகொலைக்கான விளைவினை இன்று அவர் அனுபவிக்கின்றார் என அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் குறிப்பிட்டார்.



அம்பாறை மாவட்டம் வீரமுனையில் 1990 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி இடம்பெற்ற படுகொலை தினத்தின் 32 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு வெள்ளிக்கிழமை மாலை அகம் மனிதபிமான வள நிலையம், சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பின் ஏற்பாட்டில் வீரமுனை பகுதியில் அனுஷ்டிக்கப்பட்ட வேளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்தவை வருமாறு –

அன்று முள்ளிவாய்க்காலில் லட்சக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

அதனால் தான் இன்று சிங்கள மக்களும் பல சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.காலிமுகத்திடலில் இன்று சடலங்கள் கரையொதுங்கும் நிலை காணப்படுகின்றது.சிங்கள மக்கள் கூட இன்று பயந்து நடுங்குகின்ற துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளார்கள்.அன்று தமிழ் மக்கள் அனுபவித்த துயரத்தை தற்போது சிங்கள மக்கள் அனுபவிக்கின்ற துர்ப்பாக்கிய நிலைமை இந்த நாட்டில் உருவாகியுள்ளது.எனவே தான் தமிழையும் தமிழ்த் தேசியத்தையும் என்றும் நாம் நேசிக்கின்றவர்களாகவே இருக்கின்றோம். – என்றார்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன்,காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த 1990 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி அம்பாறை மாவட்டம் வீரமுனையில் இடம்பெற்ற படுகொலை தினத்தின் 32 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு வீரமுனையில் அனுஷ்டிக்கப்பட்டதுடன் வீரமுனையில் ஆலயத்திற்குள் புகுந்து இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 55 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்பதற்காக 32 ஆவது வருடம் தொடர்ச்சியாக நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இந்த சதிகாரர்களை நாங்கள் மறக்கவும் மாட்டோம். மன்னிக்கவும் மாட்டோம்.எதிர்கால சந்ததிக்கு இதனை எடுத்தியம்பும் பிரகாரத்தில் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட சம்பவம் இடம்பெறக்கூடாது என்பதற்காகவும் நினைவேந்தலை நடத்தி வருகின்றோம் என கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

# அரச நிறுவனங்கள் நட்டத்தை எதிர்கொள்வதே நாடு வங்குரோத்து நிலையை அடைய காரணம்!

## நிலைமையை விளக்குகிறார் டயானா கமகே



முக்கிய அரச நிறுவனங்கள் நாளாந்தம் மில்லியன் கணக்கான ரூபா நஷ்டத்தைச் சந்திப்பதால் நாடு வங்குரோத்து நிலையில் இருப்பதைக் கண்டு பொதுமக்கள் ஆச்சரியப்பட வேண்டாம் என நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகே தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். கடந்த ஆண்டு சுமார் 20 மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த அரச நிறுவனங்களுக்கு 2 ஆயிரத்து 860 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். நாளாந்தம் இதன் மதிப்பு 79 கோடி ரூபா ஆகும்.

இலங்கையில்சுமார்527அரசஅமைப்புக்கள் உள்ளன எனவும், அவற்றில் இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை போக்குவரத்து சபை, ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை உள்ளிட்ட முக்கிய நிறுவனங்களாகக் கருதப்படுகின்றன எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகே குறிப்பிட்டார். இவ்வாறான நிறுவனங்களில் முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானம் 0.25 வீதமாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார். அத்தகைய நிதிகளை நிலையான வைப்புத்தொகையில் வைப்பு செய்தால், மதிப்பில் சுமார் 20 சதவீதத்தை அரசாங்கம் பெற்றிருக்க முடியும். – என்றார்.

எனவே நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய தீர்மானங்களை உடனடியாக எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகே வலியுறுத்தியுள்ளார்.






# நல்லைக்குமரன் மலர் வெளியீடு!

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவசமய விவகார குழுவினரால் நல்லூர் கந்தனின் பெருந்திருவிழாவை முன்னிட்டு வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழா நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்றது.

நாவலர் மண்டபத்தில் நேற்று காலை இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணனால் நல்லைக்குமரன் மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவசமய விவகாரக்குழு வழங்கி கௌரவிக்கின்ற யாழ். விருது இந்த ஆண்டு திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபையினருக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது திருக்கேதீச்சர ஆலய திருப்பணிக்கு உதவிய யாழ்ப்பாணத்துக்கான இந்திய தூணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனுக்கும் சிறப்பு கௌரவம் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகார குழுவினரால் சைவத்துக்கும் தமிழுக்கும் சமூகத்திற்கும் தொண்டாற்றியவர்களைக் கௌரவித்து "யாழ்.விருது' வருடாவருடம் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் யாழ்.மாநகர ஆணையாளர் இ.த. ஜெயசீலன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் உமா மகேஸ்வரன், நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், வீணாகான குருபீடத்தின் சிவஸ்ரீ சபா வாசுதேவக்குருக்கள், செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் ச.முகுந்தன், தேசிய கல்வியற் கல்லூரி ஓய்வுநிலைப் பீடாதிபதி தி.கமலநாதன், மாநகர சபையின் சைவசமய விவகார குழு உறுப்பினர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.






## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்

# குரங்கு அறிஞர்



ஒரு அறிஞர் ஆராய்ச்சி நூல் ஒன்று எழுதுவதற்காக அமைதியான இடத்தைத் தேடிக் கொண்டிருந்தார். அவர் அறியாமல், அரக்கர்கள் இருந்த பள்ளத்தாக்கை தன் இடமாகத் தேர்ந்தெடுத்தார். கோபமடைந்த ஒரு அரக்கன் அவரைப் பார்த்துக் கேட்டான்.

யார் நீ? இந்த அமைதியான பள்ளத்தாக்கை கெடுக்க வந்தாயா? என்றான்.

தயவு செய்து என்னை மன்னித்து விடு. நான் ஒரு அறிஞன். அமைதியான இடத்தைத் தேடிக் கொண்டிருந்தேன். அதனால், இங்கு வந்தேன்! என்றார்.

இதற்கு ஒரு விலை நீ கொடுக்க வேண்டும். நான் உன்னைக் குரங்காக மாற்றி விடுவேன். அதுதான் உனக்குத் தண்டனை! என்று அந்த அரக்கன் கூறினான்.

அடுத்த கணம், அந்த அறிஞர் குரங்காக மாறி விட்டார். அவர் விம்மி விம்மி அழுதார். ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்குத் தாவிக் கொண்டிருந்தார். குரங்குகளைப் போல் பழங்களைத் தின்று வந்தார்.

அவர் நகரத்தை அடைந்தார். அங்கு ஒரு கப்பல் பாக்தாத் பட்டணத்திற்குப் புறப்பட இருந்தது. அவர் அதில் தாவி ஏறினார். அதிலிருந்த பயணிகள் கூச்சலிட ஆரம்பித்தனர்.

குரங்கை வெளியே அனுப்புங்கள், கொன்றுவிடுங்கள்! என்று கத்தினர்.

கப்பலின் தலைவன் அந்த விலங்கிற்காக வருத்தப்பட்டுச் சொன்னார்.

வேண்டாம். அதுவும் நம்முடன் வரட்டும். யாருக்கும் அது தொந்தரவு தராதவாறு நான் பார்த்துக் கொள்கிறேன்!

அந்தக் குரங்கு, கப்பல் தலைவனுக்கு நன்றி உடையவனாய் இருந்தது. பாக்தாத்தில் ஒரு செய்தி பரவி இருந்தது. அரசருக்கு ஆலோசனை கூறுபவர் இறந்து விட்டார் எனவும், அரசர் அந்த இடத்திற்குத் தகுந்த ஆளைத்தேர்ந்தெடுக்கவிரும்புகிறார்எனவும்அறிவித்தார். இப்பதவியை விரும்புவோர் ஏதேனும் ஒரு செய்தியைத் தகுந்த முறையில் எழுதி அனுப்பலாம். அவற்றுள் எது மிகவும் நன்றாக உள்ளதோ, அதை எழுதியவர் ஆலோசகராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டது.

அந்தக் குரங்கு அறிஞரும் செய்தியை எழுதினார். அரசருடைய சேவகர்களும், மற்றவர்களும் நகைத்தனர். இங்கே வேடிக்கையைப் பார். இந்தக் குரங்கு அரசருக்கு ஆலோசகராகப் போகிறதாம்! என்று கேலி செய்தனர். ஆனால், எல்லாச் செய்திகளும் அரசரிடம் எடுத்துச் செல்லப்பட்டன. அரசர் எல்லாவற்றையும் படித்தார். அந்தக் குரங்கின் செய்தி மிகவும் நன்றாக இருந்தது.

அந்தக் குரங்கை நேர்முகத் தேர்விற்காக அரசர் வரச் சொன்னார். அக்குரங்கு நல்ல கம்பீரமாக உடையணிந்து குதிரைமேல் ஏறி, பாக்தாத் தெருக்களில் ஊர் வலமாக வந்து அரசரைச் சந்தித்தது. அரசவையில் அதனிடம் நிறைய கேள்விகள் கேட்கப்பட்டன. அது எல்லாக் கேள்விகளுக்கும் அறிவுப்பூர்வமான சரியான விடைகளைக் கூறியது. அரசருக்கு அதை மிகவும் பிடித்து விட்டது. ஆனால், மந்திரிகள் தடுத்தனர்.

எப்போதும் அதனால் பேச முடியாது. எப்படி ஒரு குரங்கு தலைமை ஆலோசகர் ஆகமுடியும்? என்றனர்.

அரசர் தீர்மானமாக இருந்ததால் அவர் குரங்கையே தலைமை ஆலோசகராக நியமித்தார். அவருடைய புதல்வி, இளவரசி இந்தக் குரங்கு உண்மையில் குரங்கு அன்று. ஏதோ அரக்கர்களின் மாயத்தால் இவ்வாறு மாற்றப்பட்டுள்ளது என்பதை அறிந்தாள். அரக்கர்கள், அவர்களின் மந்திர வித்தைகள் போன்றவற்றை அவள் படித்துள்ளாள். அந்த மந்திரத்தால் குரங்குத்தன்மை மாறும்படி செய்தாள். அறிஞர் தன் பழைய நிலையை அடைந்தார்.

அவர் இளவரசிக்கு நன்றி கூறினார். பல ஆண்டுகள் அங்கு தங்கி நன்றியறிதலோடு அரசருக்குத் தகுந்த ஆலோசனைகளை வழங்கினார்.

**நீதி: அறிவுடையோர் எவ்வுருவில் இருந்தாலும் மதிக்கப்படுவர்.**



## ஆட்டுக்குட்டி

துள்ளி வரும் ஆட்டுக்குட்டி
துணிந்து வரும் ஆட்டுக்குட்டி
பள்ளி செல்ல வருவாயோ?
பாடம் சொல்லித் தருவாயோ?


கள்ளம் இல்லை உன்மனத்தில்
கபடம் இல்லை உன்மனத்தில்
பள்ளம் மேடு எதுவந்தாலும்
பாய்ந்து ஓடும் ஆட்டுக்குட்டி

தொல்லை இல்லா ஆட்டுக்குட்டி
தோல் கறுத்த ஆட்டுக்குட்டி
சொல்லைக் கேட்டு வீட்டையே
சுற்றி வரும் ஆட்டுக்குட்டி

# விடுகதைகள்

1. காலைக்கடிக்கும் செருப்பல்ல காவல் காக்கும் நாயல்ல அது என்ன?
விடை: முள்
2. காலில்லா பந்தலைக் காணக் காண சந்தோசம் அது என்ன?
விடை: வானம்
3. கையுண்டு கழுத்துண்டு தலையுண்டு உயிரில்லை அது என்ன?
விடை: சட்டை
4. சொன்னதைச் சொல்லும் பொண்ணுக்கு பச்சைப் பாவாடை கேட்குதாம் அது என்ன?
விடை: கிளி
5. தண்ணீரில் மிதக்குது கட்டழகி வீடுகள் அது என்ன?
விடை: கப்பல்கள்
6. மணல்வெளியில்ஓடுதுதண்ணீர் கேட்காத கப்பல் அது என்ன?
விடை: ஒட்டகம்
7. சிவப்பான பெட்டிக்குள் கருகு மணி முத்துக்கள் அது என்ன?
விடை: பப்பாளி விதைகள்
8. நடக்கத் தெரியாதவன் நடப்பவனுக்கு வழி காட்டுகிறான் அவன் யார்?
விடை: கைகாட்டி
9. நடலாம் பிடுங்க முடியாது அது என்ன?
விடை: பச்சை குத்துதல்
10. நான் வெட்டுப்பட்டால் வெட்டியவனை அழ வைப்பேன் நான் யார்?
விடை: வெங்காயம்
11. நடைக்கு உவமை நளனக்கு தூதுவன் அவன் யார்?
விடை: அன்னம்
12. சின்னத் தம்பிக்கு தொப்பியே வினை அது என்ன?
விடை: தீக்குச்சி
13. தலை மட்டும் கொண்ட சிறகில்லாத பறவை தேசமெல்லாம் சுத்தும் அது என்ன?
விடை: தபால் தலை
14. உலகமெங்கும் படுக்கை விரித்தும் உறங்காமல் அலைகிறான் அவன் யார்?
விடை: கடல் அலை
15. காற்று வீசும் அழகான மரம் அது என்ன?
விடை: சாமரம்

# அசைந்தாடு



அசைந்தா டம்மா அசைந்தாடு
ஆசைக் கிளியே அசைந்தாடு
இசையோ டொன்றாய் அசைந்தாடு
ஈரக் குலையே அசைந்தாடு

உதய நிலாவே அசைந்தாடு
ஊதும் குழலே அசைந்தாடு
எழிலாய் வந்து அசைந்தாடு
ஏற்றத்தோடு அசைந்தாடு

ஐயம் விட்டு அசைந்தாடு
ஒழுக்கம் பேணி அசைந்தாடு
ஓவிய நூலே அசைந்தாடு
ஒளவியமின்றி அசைந்தாடு

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 14th of August 2022


We welcome students' articles in word for publication

-Editor-

kalaikkathiredu@gmail.com

# THE SUPREME COURT



The Supreme Court is the head of the judicial branch of the United States government. It is made up of a group of nine judges called justices. The head justice is called the chief justice. The president nominates, or names, justices. The Senate votes on the justices. Justices cannot be on the Supreme Court until the Senate votes for them. The Senate is part of the legislative branch of government. The president is the head of the executive branch. Those branches check the power of the judicial branch.

The Supreme Court also checks the power of the other two

The Supreme Court Building branches. Congress makes laws, and the president signs them. But if a law is unfair, the Supreme Court can stop the law. The justices look at the law carefully. They read the Constitution. They decide whether the law goes against it. If it does, then the justices can stop the law.

The Supreme Court also has other duties. If two states are having a disagreement, the Supreme Court decides the case. The Supreme Court is the top court in the country. So it also hears some cases from other courts. Sometimes, people do not think they got a fair trial. People who do not think they got a fair trial can appeal. That means they can ask another court to hear their case. Sometimes, people appeal to the Supreme Court. The justices hear some of those cases. There are a lot of cases, so the Supreme Court does not hear all of them. When the Supreme Court hears a case, it makes a deci - sion. That decision is final and cannot be appe- aled.

The Supreme Court meets in a special building in Washington, DC. When people want their cases to be heard, all of the information on the case is sent to the justices. They decide whether to hear the case. If the justices decide to hear a case, the people involved in that case go to the Supreme Court Building. They state their points of view. Then the justices make a decision. Some decisions are unanimous. That means that all of the justices agree. Other decisions are not. When the justices do not agree, the Supreme Court rules the way that the majority of the justices vote.

01. Who is the head of the Supreme Court?
A. the president
B. the chief justice
C. the Senate
D. Congress

02. What do justices read in order to decide whether a law is fair?
A. newspapers
B. the Internet
C. textbooks
D. the Constitution

03. What is the author's purpose?
A. to write about unfair laws
B. to write about the Supreme Court
C. to explain how to get to the Supreme Court Building
D. to get people to visit Washington, DC

04. The Supreme Court probably has an odd number of members so that
A. votes will not end in a tie.
B. the justices will hear cases.
C. the Supreme Court will be larger.
D. the president will nominate justices.

05. Which happens first?
Justices decide to hear a case.
The people in a case go to DC.
The justices get the case information.
The justices make a decision.

06. What is a real-life example of something that is unanimous?
A. Asoccer team wins a game.
B. A kid eats all the cookies in a jar.
C. A class votes on a celebration, and all the students want a movie day.
D. The library has already checked out your favorite book.

07. Which is a summary of the text?
A. People can appeal to the Supreme Court if they did not get a fair trial.
B. The president nominates justices.
C. The Supreme Court is made up of nine justices.
D. The Supreme Court checks the powers of the other branches and hears some cases.

08. How does the Supreme Court check the power of the other branches?
A. It nominates the president.
B. It votes on justices.
C. It decides whether a law is unfair.
D. It meets in the White House.

---

During summer, the forest is lit up by the sun. The early birds chirp merrily as the sun rises.

One day, it was a peaceful morning. As the sun was shining through the trees, a deafening roar was heard through the forest. A lion had just woken up. It turned around to see the crimson light of the sun shining on it's cub's face. Feeling pity, the lion covered the ray of sunlight with a leaf. Then, it went in search of food.

Meanwhile, the cub saw three hyenas surrounding it. They were inching closer by the minute. After the hyenas were about a metre away from the cub, they looked with glaring eyes at the cub. Then, the cub burst into tears as the hyenas pounced on it.

The cub opened it's eyes. “Why are you crying?” the lion asked. It had finished hunting food for breakfast. The cub was relieved when it saw it's father.

*By: A. Nithun*




**Intelectuals solve problems, Geniuses prevent them - Albert Einstein**

# Cricket, a flamboyant lifestyle, a murder trial, and legenday Sathasivam



'Tell her she is next on the list' while on remand at the Welikada Prison Sathasivam told his friend Alfred Moragoda when Moragoda confessed that his wife believes that 'Satha' was guilty for the murder of Mrs Sathasivam. 'Not Guilty' Justice Noel Gratiaen announced the final verdict after Sathasivam spent 20 months in remand custody. The defense was headed by Dr Colvin R de Silva, well isn't that a good enough reason to believe that 'Satha' was not guilty. Adding on, Sir Sydney Smith, a forensic scientist flew from Great Britain to assist the defense. Yes, the power of money and fame, one may say. Once again, the greatest batsman to play cricket for 'Ceylon', illustrious Mahadevan Sathasivam was free to assault the bowlers with his elegant stroke play during the day and party late into the night.

'If I had to pick a world X1, the first name on the sheet is Sathasivam' said Sir Frank Worrell, one of the greatest cricketers of West Indies after 'Satha' scored a breathtaking 96 against the touring Commonwealth team on a wet, green Colombo Oval track which is a bowler's dream and a batsman's nightmare. 'Satha' was 34 years young when he stood tall against an invincible bowling attack which consisted of the likes of Fredrick Freer, George Pope, and George Tribe. What's more, this 96 came in a team total of 153. The willow of Satha contributed 96 while all 10 batters could only score 57 runs.

### *Who is Mahadevan Sathasivam*

Born on 18th day of October, 1915 in the island nation, Ceylon, 'Satha' joined St. Joseph's College for his initial education and of course the sport the boy fell in love with was the gentlemen's game, Cricket. He then moved to Wesley College for his final years of schooling while his Cricketing career improved day by day. Satha was 26 when he tied the knot with the granddaughter of Sir Ponnambalan Ramanathan. After their marriage in 1941, the couple with their four daughters moved to No. 7, St. Alban's Place in Bambalapitiya in 1949.

Satha, the Cricketer, Satha, the Merrymaker, and Satha the first attraction of any girl

No cricketer on the island could match the supremacy of Satha in the field. Well, a bit reluctant to run between the wickets and throw himself around while fielding, but on any given wicket, and on any given day at any given circumstance Satha would go on pleasing everyone's eyes with his drives, cuts, and pulls. Equally, no Cricketer on the island had a festive lifestyle as him, and none had the attraction of ladies. Booze was his best friend, he would drink till dawn after a few hours of ballroom dancing. The Cricketer Satha was one of a kind. In his last season for Wesley College in 1936, he scored heaps and heaps of runs enabling him to start club Cricket with Tamil Union. Even though he had a brilliant last year playing for his school, Satha could not find a place in the Ceylon team. All Satha did was score runs from morning until evening and then party from night till dawn, wake up sober the next day and still go out to the middle and thrash the bowlers. He was the most consistent batter in the first two seasons at the daily news trophy but he still could not grab a place in the team.

Satha was the dream boy of many women. He was a household name and girls of all ages would rush to the grounds to catch the best seats in house to watch their lover boy whack the bowlers to all corners of the ground and then hope for an opportunity to spend a night partying, dancing and drinking with him.

### *First class debut and innings that made him the best in the world*

Finally Satha made his first class debut playing for the Rest team in the Bombay Pentangular Tournament against the Mahomedans on the 18th of November 1944. Continuing his rich form, Satha on debut scored a magnificent 101. In 1945 playing for Ceylon against a visiting Indian team, the lanky guy saved Ceylon scoring a fighting 111 when the team was wobbling at 5 for 75. Satha was very stylish when he walked out to the middle to bat, his attire, a silk shirt, a cravat, a cap worn at a rakish angle, one would nowadays say in a swag way brought about elegance in the man just like the way he used to play his classical cricket strokes. He would walk to the ball to drive them through covers, his elegant late cuts, his whips to the square leg were just classy. No I have not seen him, but I have read and heard, and yes I pictured him in my head, and when I pictured Satha, the first player of our era that popped in my imagination was Dananajaya De Silva. Ok, maybe that was a bit dreamy.

Back to Satha, another brilliant knock by the great man was his 215, an inning which was filled with some overnight liquor. Satha was touring India with the Ceylon Cricket Association team to play with the South India X1 team at Chepauk, Madras with no bat in hand, but the AG Ram Singh's Sports shop came to the rescue as Satha could get himself a bat autographed by Lindsay Hasset. Upon reading, I found that Satha on day one went on to score 134 runs, well maybe his motivation was the bottle of scotch that was offered to him by a fan if he was to score a century, Satha batted till evening with ease and emptied the bottle that was offered with equal mastery . When a drunk Satha came into his room early in the morning, his roommate Ben Navarathne took him for shower and made sure he was able to stand straight for breakfast, which was a few minutes prior to the start of play. Another offer came in from the same fan, a weeks' trip to Bomby in exchange for a double Ton, and the rest was history. Satha made sure he grabbed the all expenses paid trip with both hands. The innings of 215 to date could easily be tagged as the best in a Chempuk pitch. Ceylon won this match by an inning and 114 runs. 'I will never forget how he trashed me in Chennai, I have bowled to Bradman, Harvey, Hutton, Denis Compton, Keith Miller, The Terrible Ws — Weekes, Worrell and Walcott, and if you ask me who is the most difficult batsman that I have ever bowled to, I will mention a name that you may or may not know, the man from Ceylon, Mahadevan Sathasivam', Gul Ahmed, former Indian Captain and spinner said sharing his experience.

### *Opposition Captain to the great Don Brandmon*

The don, Sir Donald Gerorge Bradmon, the greatest ever batsman and his Australian X1 was in Ceylon and they decided to play a one `day encounter. Surprisingly the captaincy of the Ceylon team was handed over to Satha ahead of the obvious choice FC De Seram, this was because many did not like De seram and his attitude, many clubs decided to vote against him. Satha's first class span was from 1944 /45 to 1949/50, representing all Ceylon in 11 First class matches he scored 753 runs with an average of 41.83 and his 18 innings consisted of three centuries and three fifties out of which one was a double ton. In club Cricket he was loyal to Tamil Union C & A eventhough De Seram would invite him to play for SSC over an evening drink. Satha in all his Cricket had 44 centuries with 4 double centuries.

### *A playboy lifestyle, a conservative family life, and death of his wife*

Satha had one weakness, in fact two, drinking and women. When he married Paripoornam Anandam Rajendra, granddaughter of the great Sir Ramanathan, he had promised to give up on drinking, but this was never the case. It was also highlighted that he used to have a shot of whisky even during the water breaks of the matches and go back to the crease. That was Satha, giving up drinking was a mere impossibility. The Sathasivam couple had four kids and all of them were girls. Satha most often than not, failed to shower his wife with love and cater to her needs. He was busy with his lavish lifestyle and it was also stated that Satha had an affair with Yvonne Stevenson. Indeed it was difficult for a fun loving and social guy to become a family man.

On 6 September 1951, a divorce was filed by Mrs Sathasivam and on 10 October she was found strangled on the kitchen floor with a motor placed on her neck. They had a troubled family life and it was natural for the police to arrest Satha as the prime suspect. Apart from Satha the police also arrested the 18 year old servant, William. Willam went missing after the incident and was found 10 days later in Tangalle. When arrested Williams claimed that he committed the crime and sold her jewellery afterwards. Twist in the tale was when he went to IGP Aluvihare and pinned it on Satha, stating that he was forced by his master to assist him in killing the lady. With that Satha became the prime suspect and was remanded in custody. Adding more spice to the story, Williams was flustered and couldn't stick to one answer when he took the stand, obviously when the best defence counsel of the country questions and cross questions you, a 19 year old boy would shiver and panic. The driver who came to pick up Satha in the morning of the incident testified that he saw Mrs Sathasivam standing in the doorway. This was a turning point as Satha never came back and his wife was left with the servant boy, so all fingers were pointed towards the boy, who was employed 10 days prior to the murder. Forensics also agreed that the timing of death was after Satha left home. This is the case in brief as there is much to pen down.

### *The final verdict*

Satha was a decorated personality who associated great people all around the globe. It was stated that West Indies players and Australian wicket keeper Keith Miller visited Satha while he was in prison. Also stated was that Sir Frank Worrel had requested him to hire the best lawyers and the cost would be borne by him. This was the love he received. He spent 625 days in judicial custody, his trial before a special jury at the Assizes Court of the Western Province lasted 57 days and the jury, after 64 minutes, decided that Satha was not guilty.

### *Aftermath, captaining three national Cricket teams*

Satha left Ceylon after he was released, played a bit of Cricket in England, used to come to the island occasionally and score a few centuries. In 1958, he migrated to Singapore to take up an insurance business, scoring heaps of runs in Singapore. He migrated with his new wife Yvonne and his four daughters, and added three more kids to his family. He was then transferred to Malaya (now Malaysia) and went on to captain both the teams. Making him the first and only to Captain three international teams. While Satha left, his defence consul Dr Colvin lost the Wellawatte – Galkissa seat in the 1952 General elections.

Why were people furious? Did they believe it was Satha who committed the murder and Colvin safeguarded a criminal? They assumed that Satha used his money, fame and what not to pin the murder on an innocent teenager. Many were jealous of Satha's lavish lifestyle. Did Satha actually do it? Or was he innocent as proven? Satha had all the answers to these questions but carried them to his grave on 9 July 1977, at the age of 61 when he died of a heart attack in Colombo.

# 54 நதிகளைப் பகிர்ந்து கொள்ளும் பாரத தேசமும் வங்காளதேசமும்!

**சுமார் 414 கிலோ மீற்றர் நீளம் கொண்ட டீஸ்டா நதி கிழக்கு இமாலய மலைகளில் இருந்து உருவாகி, இந்தியாவின் சிக்கிம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள் ஊடாகப் பயணித்து வங்காளதேசத்திற்குள் நுழைந்து வங்காள விரிகுடாவில் கடலில் கலக்கின்றது.**



பாரத, வங்க தேசங்களின் பிரதமர்கள்

இந்தியாவும் வங்காளதேசமும் இந்த மாத இறுதியில் பெரிய நதி நீரைப் பங்கிடுதல் தொடர்பாக முக்கியமான ஓர் ஒப்பந்தத்திலாவது கையெழுத்திடும் என்று 'தி ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது. இரு நாடுகளுக்கிடையேயான நீர்ப் பகிர்வு என்பது பெரும்பாலும் அரசியல் அர்த்தத்தை எடுத்துக் கொள்ளும் ஒரு முக்கியமான - உணர்ச்சிபூர்வமான - விடயமாகக் கருதப்படுவதால், ஒப்பந்தத்திற்கான திட்டமிடல் விடயங்கள் இரு தரப்பு அதிகாரிகளாலும் இறுக்கமாகப் பாதுகாக்கப்படுகின்றன.

வங்காளதேசப் பிரதமர் ஷேக் ஹசீனா செப்டெம்பர் 6 - 7 ஆம் திகதிகளில் இந்தியாவுக்குப் பயணம் செய்கின்றார். அதற்கு முன்னதாக ஓகஸ்ட் கடைசி வாரத்தில் கூட்டு நதிநீர் ஆணையம் கூடவிருக்கின்றது. விவாதத்தில் உள்ள முக்கிய ஒப்பந்தம்(கள்) தவிர, நதி நீரின் தரவுப் பகிர்வு மற்றும் சிறந்த வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டமிடல் ஆகியவை அந்தக் கூட்டத்தில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.



சிக்கிமில் டீஸ்டா நதி

அஸ்ஸாமில் இருந்து பங்களாதேஷிற்குள் பாயும் குஷியாராந்தி பற்றிய ஒப்பந்தம் கூட்டு நதிநீர் ஆணையத்தின் கலந்துரையாடலின் போது செய்யப்படும் அத்தகைய ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இருப்பதற்கான வலுவான சாத்தியம் நிலவுவதாக ஒரு தேடல் மூலம் 'தி ஹிந்து' அறிகிறது.

பிரதம மந்திரி ஹசீனாவின் வருகைக்கு முன்னதாக ஒரு பெரிய நதி ஒப்பந்தத்தை எட்டுவதற்கான வலுவான உந்துதல் இருப்பதால், கங்கை சம்பந்தப்பட்ட பெரிய ஒப்பந்தத்துக்கான வாய்ப்புகள் குறித்தும் ஓர் இராஜதந்திர ஆதாரம் சுட்டிக்காட்டுகிறது.

அடுத்த ஆண்டு வங்காளதேசம் பொதுத் தேர்தலுக்குச் செல்கிறது. அதற்கு முன்னர் பிரதமர் ஷேக் ஹசீனாவின் டெல்லிக்கான கடைசிப் பயணமாக இது இருக்கலாம்.

### டீஸ்டா நதிநீர் ஒப்பந்தம்

பிரதமர் ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் அரசாங்கம், தவிர்க்கப்பட்டு வரும் டீஸ்டா நதிநீர் ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு முடிவுறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது. திருமதி ஹசீனா ஒக்ரோபர் 2019 இல் இந்தியாவிற்கு விஜயம் செய்தார். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மார்ச் 2021 இல் டாக்காவிற்கு விஜயம் செய்தார். அப்போதான அனைத்து உயர்மட்ட உரையாடல்களின் போதும், டீஸ்டா விவகாரத்தில் தனது அவசரத்தை பங்களாதேஷ் தெரிவித்தது.

அந்தச் சூழலில், இந்திய உயர்ஸ்தானிகர் விக்ரம் துரைசாமி, டீஸ்டா நதிநீர் ஒப்பந்தத்தில் ஏற்பட்ட தாமதத்தை விளக்குகையில், மேற்கு வங்க மாநில அரசாங்கத்தின் பங்கைச் சுட்டிக்காட்டி அதில் உள்ள 'உள்நாட்டுச் சவால்கள்' பற்றி முன்னர் குறிப்பிட்டிருந்தார்.

எவ்வாறாயினும், நதி நீர் தொடர்பான ஒப்பந்தங்கள் குறித்த ஒரு தொகுப்பை வங்காளதேசத்துக்கு வழங்க இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது. இது டாக்காவுடன் நதி வளங்களைப் பகிர்ந்து கொள்வதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகக் கருதப்படும்.

டெல்லிக்கும் (இந்திய மத்திய அரசுக்கும்) கொல்கத்தாவுக்கும் (மேற்கு வங்க மாநில அரசுக்கும்) இடையிலான அரசியல் உறவுகள் டீஸ்டா நீர்நிலை விவகாரம் தேங்கிப் போக ஒரு காரணமாக இருந்தபோதிலும், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி கடந்த வாரம் டெல்லி சென்று பிரதமர் நரேந்திர மோடியை தனது மாநிலத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள் குறித்துச் சந்தித்தார். இந்தியா - வங்காளதேசம் இடையேயான பேச்சுவார்த்தையின் பின்னணியில், திருமதி மம்தா பானர்ஜியின் இந்த வருகை, இந்தியாவுக்கும் வங்காளதேசத்துக்கும் இடையே நதிநீர் பங்கீடு குறித்த ஊகங்களுக்கு பங்களித்தது.

### கவனத்துக்குள்ளாகும் மற்றைய ஆறுகள்

கூட்டு நதிநீர் ஆணையத்தைக் கூட்டுவது என்பது வங்காளதேசத்தின் நீண்டகாலக் கோரிக்கையாக உள்ளது. ஏனெனில், அமைச்சர்கள் அளவிலான கூட்டம் கடைசியாக 2010 இல் நடைபெற்றது. இதற்கிடையில் இரு தரப்புக்கும் இடையே நதிகள் தொடர்பான பல முன்னேற்றங்கள் வெளிப்பட்டாலும், அவற்றுக்கு ஓர் ஒத்திசைவான கொள்கை தொடர்பான வடிவம் கொடுக்கப்பட வேண்டும். இத்தகைய முயற்சிகளுக்கு கூட்டு நதிநீர் ஆணையமே பொருத்தமான தளம் என வங்காளதேசம் கருதுகிறது.



டீஸ்டா நதியில் இந்திய மின்னுற்பத்தி நிலையம்

அடுத்த கூட்டு நதிநீர் ஆணையம் 'நேர்மறையான பக்கத்தில்' கவனம் செலுத்தி, பேச்சுவார்த்தையை டீஸ்டாவிற்கு அப்பால் மற்றும் இதர பெரிய நதிகளுக்கு கொண்டு செல்லும் என்றும், மேலும் மனு, முஹூரி, கோவாய், கோமதி, தர்லா மற்றும் துத்குமார் போன்ற நதிகளில் இந்தியாவுக்கும் வங்காளதேசத்துக்கும் இடையில் அதிக ஒத்துழைப்பைக் கொண்டு வந்து இணக்கத்தைத் தீவிரப்படுத்தும் என்றும் புரிந்து கொள்ளப்படுகிறது.


வங்காளதேசத்தின் சமீபத்திய பொருளாதார வெற்றியின் பின்னணியில் எல்லைக்குட்பட்ட ஆறுகள் ஒரு முக்கிய அங்கமாக உள்ளன, ஏனெனில் அவை நாட்டில் மில்லியன் கணக்கானவர்களுக்கு வாழ்வாதாரத்தை உருவாக்குகிறது.

வங்காளதேசமும் இந்தியாவும் 54 நதிகளைப் பகிர்ந்து கொள்கின்றன. மேலும் சிறந்த மீன்வளம் மற்றும் வெள்ளக் கட்டுப்பாட்டு உத்திகளைத் திட்டமிடுவதற்காக இந்தியத் தரப்பிலிருந்து கூடுதல் தரவுகளை அணுகுவதில் டாக்கா ஆர்வமாக உள்ளது. வருடாந்திர வெள்ளத்தின் பேரழிவு விளைவுகளைச் சமாளிக்க வங்காளதேசம் தயாராக உதவுவதற்காக கூட்டு நதிநீர் ஆணையக் கூட்டத்தின் போது போது வெள்ளக் கட்டுப்பாடு தொடர்பான தரவுகளைப் பகிர்வதற்கான காலக்கெடுவை நீடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருப்பதாக 'த ஹிண்டு' உணர்கிறது..

2026 இல் புதுப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ள 1996 ஆம் ஆண்டின் கங்கை நீர் ஒப்பந்தத்தை இரு தரப்பும் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தில் டிசெம்பர் 12, 1996 இல் அப்போதைய இந்தியப் பிரதமர் எச்.டி. தேவகவுடா மற்றும் பிரதமர் ஹசீனா ஆகியோர் ஒப்பமிட்டனர். முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு அது புதுப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்தப் பிரச்சினைகளைத் தவிர, நதி மாசுபாட்டைக் குறைத்தல் மற்றும் வழிசெலுத்தல் அதிகரிப்பு ஆகியவையும் நிகழ்ச்சி நிரலில் உள்ளன எனத் தெரிகிறது.

**(மூலம்: 'த ஹிண்டு')**



வங்காளதேசத்தில் டீஸ்டா நதி





# நல்லூர் கந்தசுவாமி கோவில் வரலாறு



நல்லூர் கந்தசுவாமி கோவில் இலங்கையில் மிகவும் புகழ்பெற்ற இந்துக் கோயில்களுள் முக்கியமானது. இது இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில், யாழ்ப்பாண நகரத்திலிருந்து சுமார் இரண்டு மைல் தொலைவிலுள்ள நல்லூர் என்னும் இடத்தில் அமைந்துள்ளது. நல்லூர் 12ம் நூற்றாண்டு தொடக்கம் 17ம் நூற்றாண்டின் முற்பகுதிவரை யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரமாக இருந்தது. இக்கோவிலின் தோற்றம் பற்றிச் சரியான தெளிவு இல்லையெனினும், யாழ்ப்பாண அரசு காலத்தில் மிகவும் முக்கியமான ஒரு கோவிலாக இருந்ததாக அறியப்படுகிறது.

யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் வம்சத்தின் முதலாவது அரசனான கூழங்கைச் சக்கரவர்த்தியின் அமைச்சனொருவனான புவனேகபாகு என்பவனால் இக்கோவில் கட்டுவிக்கப்பட்டதென யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. இதற்கு ஆதாரமான பின்வரும் தனிப்பாடல், 16 அல்லது 17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் கைலாய மாலை என்னும் நூலின் இறுதியில் காணப்படுகின்றது.

**இலக்கிய சகாத்தமெண்ணூற் றெழுபதாமாண்ட
தெல்லை
யலர்பொலி மாலை மார்பனாம் புவனேகபாகு
நலமிகுந்திடு யாழ்ப்பாண நகரிகட்டுவித்து நல்லைக்
குலவிய கந்தவேட்குக் கோயிலும் புரிவித்தானே**

ஆனால் இது 15 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி 17 ஆண்டுகள் ஆண்ட கோட்டை அரசின் பிரதிநிதியான, பிற்காலத்தில் சிறீசங்கபோதி எனும் பட்டத்தைக்கொண்ட புவனேகபாகு எனப்பெயர் கொண்டு கோட்டை அரசரான, செண்பகப் பெருமாள் என்பவரால் கட்டப்பட்டதாகும். இதற்கு ஆதாரமாக நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் இன்றும் கூறப்பட்டுவரும் கட்டியத்தை இவர்கள் காட்டுகிறார்கள். சமஸ்கிருதத்தில் உள்ள இக்கட்டியத்தின் பகுதி பின்வருமாறு உள்ளது:-

“சிறீமான் மஹாராஜாதி ராஜாய அகண்ட பூமண்டலப்ரதியதி கந்தர விஸ்வாந்த கீர்த்தி சிறீ கஜவல்லி மஹாவல்லி சமேத சுப்ரமண்ய பாதாரவிந்த ஜனாதிரூட சோடச மஹாதான சிவகோத்திரோற்பவ இரகுநாத மாப்பாணர் சமுக திருவருள் பொருந்திய தெய்வயானையுடனும், வள்ளியம்மனுடனும் சேர்ந்திருக்கின்ற சுப்பிரமணியரின் திருவடிகளை வணங்குபவனும், மன்னர்களுக்கு மன்னனும், மிகுந்த செல்வங்களுடையவனும், இப் பரந்த பூமண்டலத்தில் எல்லாத்திசைகளிலும் புகழப்படுபவனும், மக்கள் தலைவனும், பதினாறு பெருந்தானங்களைச் செய்பவனும், சூரிய குலத்தில் உதித்தவனுமாகிய சிறீசங்கபோதி புவனேகபாகு…” என்பது இதன் பொருள்.

முன்னரே சிறியதாக இருந்த கோவிலைத் தனது ஆட்சிக்காலத்தில் புவனேகபாகு பெருப்பித்துக் கட்டியிருக்கக் கூடும் என்பதே பொருத்தம் என்பது வேறுசிலர் கருத்து.

உண்மையில் நல்லூர் இப்போது உள்ள அமைப்பானது முன்றாவது கோவில் கட்டுமானம் ஆகும். இந்த 3 வது கோவிலின் அமைப்பில் அதுவரை இருந்த பழைய ஆலயத்தின் எந்த கட்டுமானங்களும் சம்பந்தப்படாத புதிய கட்டுமானம் தான் இப்போதுள்ள நல்லூர் கந்தன் ஆலயம் அகும்.

யாழ்ப்பாண அரசின் இறுதிக்காலத்தில் நல்லூரிலிருந்த மிகப்பெரிய கோவில் இதுவேயென்பது போர்த்துக்கேயருடைய குறிப்புக்களிலிருந்து தெரியவருகிறது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேயத் தளபதியான பிலிப்பே டி ஒலிவேரா, 1620இல் அரசின் தலைநகரத்தை யாழ்ப்பாணத்துக்கு மாற்றியபோது நல்லூர்க் கோவிலை இடித்துத் தரைமட்டமாக்கும்படி உத்தரவிட்டான். இதிலிருந்து பெறப்பட்ட கற்கள் யாழ்ப்பாணத்தில் புதிய கோட்டை கட்டுவதில் பயன்பட்டன என தெரிகின்றது. இது இருந்த இடத்தில் போர்த்துக்கேயர் சிறிய கத்தோலிக்க தேவாலயமொன்றை அமைத்ததாகத் தெரிகிறது. பின்னர் ஒல்லாந்தர் இதனைத் தாங்கள் சார்ந்த புரட்டஸ்தாந்த கிறிஸ்தவ தேவாலயமாக மாற்றினார்கள். இன்றும் இவ்விடத்தில் பிற்காலத்தில் பெரிதாகத் திருத்தியமைக்கப்பட்ட கிறிஸ்தவ தேவாலயமே காணப்படுகின்றது.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் (1658 - 1798) இறுதி ஆண்டுகளில் இந்துக் கோவில்கள் அமைப்பது தொடர்பாக ஆட்சியாளர்களின் இறுக்கம் ஓரளவு தளர்ந்த போது, நல்லூர் கந்தசுவாமி கோவில் மீள அமைக்கப்பட்டது. முன்னைய இடத்தில் கிறிஸ்தவ தேவாலயம் இருந்தபடியால் இன்னொரு இடத்தில் கோவிலை அமைத்தார்கள்.

மடாலயம் போல் காட்சியளித்துக் கொண்டிருந்த இவ்வாலயத்தை, ஆகமம் சார்ந்த கிரியை முறைக்கும், சிற்ப சாத்திர விதிக்கமைந்த கட்டட முறைக்கும் மாற்றியமைத்து, இன்றைய நிலைக்குக் கொண்டுவர வித்திட்டவர் ஆறுமுக நாவலர் ஆவார். அவரைத் தொடர்ந்து, அவரது மாணவர்கள் இவ்வாலய வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு காட்டினார்கள்.

# கல்விக்கதிர்



- அகரன் -





சங்கிலியன் அல்லது முதலாம் சங்கிலி அல்லது ஏழாம் செகராசசேகரன் என்பவன் 1519 தொடக்கம் 1561வரை யாழ்ப்பாண அரசை ஆண்ட அரசன் ஆவான். போர்த்துக்கேயருடைய குறிப்புக்கள் இவனை ஒரு கொடூரமான அரசனாகக் காட்டுகின்றன. இறுதிவரை பல வழிகளிலும் யாழ்ப்பாணத்துக்குள் புக முயன்ற போத்துக்கேயரைத் துணிந்து எதிர்த்து நின்றவன்.

போர்த்துக்கேயருக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தை ஆண்ட ஒல்லாந்தரின் சங்கிலியைப் பற்றிய குறிப்பு ஒன்றில் அவனைச் ‘சியங்கேரி’ என்னும் பெயரால் குறித்துள்ளனர். இக்குறிப்பில் இவ்வரசன் 42 ஆண்டுகளுக்கு மேல் யாழ்ப்பாணத்தை ஆண்டான் எனவும், பின்னர் போர்த்துக்கேயர் அவனது அரசாட்சியை அழித்துவிட்டு 97 ஆண்டுகள் ஆண்டதாகவும் கூறப்பட்டுள்ளது. இதை அடிப்படையாக வைத்தே சுவாமி ஞானப்பிரகாசர் சங்கிலி ஆட்சி 1519 ஆண்டிலிருந்து 1561வரை இருந்ததாகக் கணித்துள்ளார்.

சங்கிலியனின் ஆட்சி எவ்வாறு முடிவுற்றது என்பதில் தெளிவில்லை. இவன் மக்களால் அகற்றப்பட்டதாகப் போர்த்துக்கேயப் பாதிரியாரான குவைறோஸ் குறிப்பிட்டுள்ளார். மக்கள் கலகம் செய்து சங்கிலியை அகற்றிவிட்டு அவனது மகனான புவிராச பண்டாரத்தை அரசனாக்கினர் என்றும், புவிராசன் ஆண்மையற்றவனாய் இருந்தமையால் சங்கிலியே ஆட்சியை நடத்தி வந்தான் எனவும் செ. இராசநாயகம் கூறுகிறார். இவரது கூற்றுப்படி சங்கிலி 1565 ஆம் ஆண்டு காலமானான்.

யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதிமன்னன் சங்கிலி செகராசகேகரன் என்று கொள்ளப்படுவதற்குக் காரணம் இந்த இராசதானியை ஆண்ட இன்னொரு சங்கிலிகுமாரனின் கதையையும் இணைத்தமையாகும். யாழ்ப்பாணத்தை ஆண்ட முதலாவது சங்கிலி இந்த நாட்டின் இறுதி மன்னனல்லன். அவன் அரசனான வழி தவறாயினும், நாட்டை நன்கு பரிபாலனம் செய்தவன். மாவீரன். கடைசி வரை நாடு அந்நியர் வசமாகாது பாதுகாத்தவன். பிரகன்சாவுடன் செய்து கொண்ட சமாதான உடன்படிக்கைப்படி நடந்த கொள்ளவில்லை. திறை செலுத்தவில்லை. ஆனால் இந்த அரசின் இறுதிக் கொழுந்தல்லன். பட்டத்து இளவரசனும் அவன் மனைவியும் போர்த்துக்கேயரால் கோவைக்குக் கொண்டு செல்லப்பட்டு மதம் மாற்றப்பட்டு இறந்தனர்.

போர்த்துக்கேயரால் கொண்டு செல்லப்பட்ட புத்ததந்ததாது பலர் வேண்டியும் கவனத்தில் கொள்ளப்படாது மூட நம்பிக்கையை வளர்க்கும் என்பதால் பொடி செய்யப்பட்டு கடலில் கரைக்கப்பட்டது. 1515 முதல் 1565 வரை இந்த நாட்டை சங்கிலி ஆண்டான். அவன் முடிவு எவ்வாறாயிற்று என்று தெரியாதாயினும் அவன், பின்னர் ஐந்து மன்னர்கள் இந்தஅரசை ஆண்டுள்ளனர். அவர்கள் காசிநயினார், பெரியபிள்கீளை, புவிராஜசிங்கன், எதிர்மன்னசிங்கன், சங்கிலிகுமாரன் என்போராவர். பெரியபிள்கீளை யாழ்ப்பாணத்தின் அரசனாக இருந்த போது திறை செலுத்தப்பட்டது. பரநிருபசிங்கர், பரராசசிங்கன், வன்னி இளவரசன் ஆகிய மூவரும் கோவையில் மதம் மாறி இடையில் மரித்தார்கள். அதனால் அரசாளும் சந்தர்ப்பத்தை இழந்தார்கள். 1584 இல் மன்னனாகிய புவிராஜபண்டாரன் போர்த்துக்கேயருக்கு எதிராக மன்னாருக்குப் படையெடுத்தான். 1591 இல் அந்திரே பூர்த்தாடு தே மொண்டென்சா எனுகுல் கப்பித்தான் பெரும் படையுடன் சென்று புவிராஜனின் தலையைக் கொய்தான். அதன் பின்னர் எதிர்மன்னசிங்கன் அரசனான். அதன் பின்னர் சங்கிலிகுமாரன் என்பவன் மன்னனானான். இவன் கொடுங்கோலன் என மக்கள் முறையிட்டதால் போர்த்துக்கேயர் இவனைப் பிடித்து கோவைக்கு அனுப்பிச் சிரச்சேதம் செய்தனர். 1620 இல் பிலிப் தே ஒலிவேறா என்ற போர்த்துக்கேயன் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி தானே நிர்வாகியானான். அதன்பின்பே போர்த்துக்கேயர் ஆட்சி யாழ்ப்பாணத்தில் ஆரம்ப மானது. யாழ்ப்பாணம் தன் சுதந்திரத்தை முதன்முதல் இழந்தது.

## நேர்காணல்

# குறுந்திரைப்பட இயக்குநர் புகாரி நளீர் உடனான நேர்காணல்.



**நேர்கண்டவர் - திருமலை தட்சா**

**01) உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்?**

நான் புகாரி நளீர். மூதூரில் நெய்தல் நகரை வசிப்பிடமாகக் கொண்டவன். படித்தது QS, and diploma in mass media. அத்தோடு V.K.கம்பனியில் 9 மாவட்டங்களுக்கு மேனேஜராக பணிபுரிந்தேன்.

**02) இக் கலைத்துறையில் உங்களுக்கு ஏற்பட்ட ஆர்வம் குறித்தும், அதனூடான பயணம் குறித்தும்?**

சமூகத்தில் நடக்கின்ற பிரச்சினைகள், நல்ல சிந்தனைகள் போன்றவற்றை எடுத்துக் கூறுவதாக இருந்தால் இவ் துறை தான் சாத்தியம். அதற்காகத்தான் இத்துறையினைத் தேர்ந்தெடுத்தேன். முதலில் திரைப்படம் எடுப்பதற்காக தான் இத்துறையை தெரிவு செய்தேன். ஆனால் அதற்கு நடிகைகள், நடிகர்கள் கிடைக்காத காரணத்தினால் குறுந்திரைப்படங்களை எடுத்து வருகிறேன்.

**03) இத்துறையின் மூலமாக சமூகத்துக்கு தேவையான சிறந்த விடயங்களை உங்களது கதைக்கரு மூலமாக கொடுக்க முடிகின்றதா?**

ஆம் கொடுக்க முடிகின்றது. புது வழிமுறையைக் கொண்டு நேர் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டே எனது கதைக்கருவினை அமைக்கிறேன். இருந்தும் கருத்துக்களைக் கூறுவதற்கு ஊடக சுதந்திரம் இருந்தாலும் சிலரினால் அக்கருத்துக்களை வழங்க முடியாதுள்ளது. நடிகர்கள், நடிகைகள் கூட அவ் வசனங்களைப் பேச மறுக்கின்றார்கள்.

**04) இதுவரையில் படைத்த படைப்புக்கள் பற்றி?**

இதுவரையில், முப்பது ரூபாய், கூலி, பள்ளிக்கூடம் ஆகிய படைப்புகளை படைத்துள்ளேன். இதில் 30 ரூபாய் குறுந்திரைப்படம் 5 தேசிய விருதுகளைப் பெற்றுள்ளது. இவ் விருதுப் போட்டியில் மும்மொழிகளிலும் குறுந்திரைப்படங்கள் பங்குபற்றின. மொத்தமாக 12 விருதுகள் அறிவிக்கப்பட்டு அதில் 5 விருது எனது 30 ரூபாய் குறுந்திரைப்படத்திற்கு கிடைத்தது. இதில் சிறந்த இயக்குநருக்கான விருதும் கிடைத்தது. கூலி, பள்ளிக்கூடம் ஆகிய படைப்புகள் விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**05) ஒவ்வொரு குறுந்திரைப்படத்தினையும் ஆரம்பித்து நிறைவு செய்யும் வரையிலான மொத்தச் செலவுகளை எவ்வாறான முறையில் ஈடு செய்கின்றீர்கள்?**

முப்பது ரூபாய் , கூலி என்பனவற்றை எனது சொந்த செலவிலேயே செய்தேன். நான் எழுத்தாளர், இயக்குளர், கதையாசிரியர் என்பதை வெளியுலகத்திற்கு அறியச் செய்வதற்காகவே முப்பது ரூபாய் , கூலி ஆகிய குறுந்திரைப்படங்களை எனது சொந்த செலவில் செய்தேன்.

பள்ளிக்கூடம் குறுந்திரைப்படத்தை மாத்திரமே அனுசரணை மூலம் செய்தேன்.

**06) இத் துறை மூலமாக உங்களுக்கு போதியளவிலான வருமானம் கிடைக்கப் பெறுகின்றதா?**

இல்லை. வருமானத்தை எதிர்பார்த்து நான் இத்துறையைத் தொடரவில்லை.

## "உங்கள் இலக்கும், சிந்தனையும் சரியாக இருந்தால் முயற்சி செய்யுங்கள்"

**07) ஒரு இயக்குநராக பணியாற்றும் போது எவ்வாறான சவால்களை எதிர்கொள்கின்றீர்கள்?**

இங்கு சகல பணிகளையும் நானே பொறுப்பு எடுக்க வேண்டியுள்ளது. கதாபாத்திரத் தேர்வு பிரதானமானது. படப்பிடிப்புத் தளத்துக்கு ஒருவர் வராதிருந்தால் அப் படப்பிடிப்பு நடாத்த முடியாமல் போகும். அதற்கான செலவினம் அதிகரிக்கும். சில வசனங்களை பேசுவதற்கு நடிகர்கள் மறுக்கிறார்கள். ஒரு சில கதாபாத்திரங்களுக்கு யாரும் நடிப்பதற்கு முன்வருவதில்லை. எனது கற்பனையை முழுமையாகக் கொண்டு வர முடியாமல் உள்ளது. மொத்தத்தில் அறுபது வீதமே ஒவ்வொரு குறுந்திரைப்படத்திலும் சாத்தியமாக உள்ளது.

**08) திருகோணமலை மாவட்டத்தில் குறுந்திரைப்படங்களுக்கான வரவேற்பு எவ்வாறு உள்ளது?**

முதலில் எதிர்ப்பும் இப்போது ஆதரவையும் பார்க்கின்றேன்.

**09) இத்துறையில் உங்களுடன் இணைந்து பணியாற்றுபவர்கள் பற்றி?**

எனது நண்பர் ஐ.மு.நஃபீஸ் (CRPO) மற்றும் ஹா.மு.றிஸ்வான் எனக்கு பக்கபலமாக இருக்கிறார்கள். தொகுப்பாளர்களான ஆஹ்சன், ஜெஸா அஹமட், ஜுனைஸ் சதீர், படப்பிடிப்பாளர் பாரீஸ், நப்சான், விவேக்ஷன்,மனோகரன், இசை டொமினிக் பிரகாஷ், நடிகர்களாக தாரணி, அன்பழகன், ஹம்சத்வணி, பர்சாத், அர்ஷாத்,சத்தியா, விக்டர் இன்னும் பெயர் குறிப்பிடப்படாத பலர். குறிப்பாக பள்ளிக்கூடம் குரல் திரைப்படத்தில் கிளிவெட்டி பாடசாலை அதிபர் கோணேஸ்வரன் மற்றும் துணை இயக்குநராக இருந்த ரமேஷ் தனுஷ்கா, மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் கோபாலரெத்தினம் மற்றும் பெயர் குறிப்பிடப்படாத அனைவருக்கும் இச் சந்தர்ப்பத்தில் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் என்னை வெளியுலகத்துக்கு எடுத்துக் காட்டிய அனைத்து மீடியாக்களுக்கும் இவ் வாய்ப்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**10) எதிர்காலத்தில் வரவிருக்கும் படைப்புகள் பற்றி?**

பசி , மாஸ்க் என்ற குறுந்திரைப்படங்களும், முழுநீள திரைப்படமாக ஒருவன், 90 Kids என்பனவும் எதிர்காலத்தில் வரவிருக்கும் படைப்புகளாகும்.

**11) நிறைவாக, சாதிக்க நினைக்கும் இளைஞர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது?**

உங்கள் இலக்கும், சிந்தனையும் சரியாக இருந்தால் என்ன தடைகள் வந்தாலும் தொடர்ந்து முயற்சி செய்யுங்கள். முயற்சிகள் ஒரு போதும் வெற்றியை சுவைக்காமல் இருந்ததில்லை.



# இரவின் யுத்தத்தை முன்னிறுத்தி

இன்றைய நாளின்
கடைசி முத்தத்தை
தருவதில் ஏன்
இந்தத் தாமதம்?

பனி பெய்யும்
நள்ளிரவுக் குளிர்மையின்
போர்வையை அகற்றும்
உன் முத்தச் சூட்டில்
உருகி எரியும்
மெழுகு மனதின்
ஆத்ம வாசம்
உணர்வாயா?

நாம் தவறவிட்ட மழைநாள்களின்
குளிர்மை
இன்னமும்
மேகங்களுக்குள்
ஒளிந்து கிடக்கிறது

வா
மீண்டும்
காதல் செய்வோம்

முப்பது வருடங்கள்
சேர்த்து வைத்த
என் முழுக்காதலையும்
தருகிறேன்

இரவின் வெளிச்சத்தில்
நீ
சிரிக்கிறாய்
நான் அதிர்கிறேன்
பட்டாம் பூச்சித் தாக்கம் பரவுகிறது

நட்சத்திரங்களைப்
பறித்து
பத்திரப்படுத்திக் கொள்கிறாய்
நிலவை தூசிதட்டி
உன் அறையில்
மாட்டிவிடுகிறேன்
காலை எழுந்ததும்
நிலவுக் கண்ணாடியில்
முகம் பார்த்துக் கொள்
உச்சி வகிர்ந்து
நெற்றியில்
நட்சத்திரப் பொட்டை வைத்துக்கொள்

வெட்டியடிக்கும்
மின்னல்
உனக்கு தலைவாரி போகிறது

நீ
மேகத்தில் பூச்சூடி
வானவில்லை
நாடாவாய் கட்டி விடுகிறாய்

வாசல் எங்கும்
இரவு பெய்த தூறலில்
பூத்துக் கிடக்கும் காளான்கள் மீது
கொட்டிக்கிடக்கின்றன
பொன்னாவரைப் பூக்கள்

உன் ஆடைப்பூக்கள் எங்கும்
ஆயிரமாயிரம் மின்மினிகள்
வெளிச்சத் தேனை
பாய்ச்சி விட்டுச்
செல்கின்றன

ஆயிரம் பொன்வண்டுகள்
ஒரே நேரத்தில்
தம் நிறங்களை
உனக்குத் தருகின்றன

இன்னமும்
நீண்டுகொண்டு தான்
இருக்கிறது
இந்த இரவு

உன் முத்தத்திற்கும்
வாசம் உண்டு
அதன் சத்தத்திற்கும்
நேசம் உண்டு

அன்பெனும் பெரு வெளியின்
காதல்மலை நீ
உனை செதுக்கும்
நேச உளி நான்

காதல் செய்வோம்
காதல் செய்வோம்
இந்த உலகம் வியக்க வியக்க
காதல் செய்வோம்

– மைக்கல் கொலின் –




# கம்பன் சொல்லும் காதல்

அமரக் காதல், ஜீவித காதல், தெய்வக் காதல் இன்னும் எத்தனையோ பெயர் வைத்துக் கொள்ளலாம். காதல் அத்தனை தித்திப்பானது. வேப்பாங்காயை கடித்துவிட்டு இனிக்கிறதே என சொல்லும் காதல். காதல் எதையும் தாங்கும் வல்லமை கொண்டது. காதல்தனை காதலிப்பவர்களால் மட்டுமே உணர்ந்து கொள்ள முடியும். எத்தனையோ புராணங்களில் காதல் புராணம் மிகவும் அற்புதமானது.

கவிச்சக்கரவர்த்தி கம்பனின் மகன் அம்பிகாபதி மற்றும் முதலாம் குலோத்துங்க சோழன் மகள் அமராவதியின் காதல் மிகவும் பிரசித்தி பெற்றது. முதலாம் குலோத்துங்க சோழனின் மனதுக்கு பிடித்தவராகிறார் கம்பன். கம்பனின் காவியத் திறமைக்கு மதிப்பளித்து தனது அரசவை கவிஞர் ஆக்குகிறார் சோழ மன்னர். கம்பனின் வளர்ச்சி கண்டு பொறுப்பற்ற தன்மையில் பொறாமை கொள்கிறான் ஒட்ட கூத்தன்.

கம்பனின் மகன் அம்பிகாபதியும், சோழ மன்னரின் மகள் அமரவாதியும் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்ததே சோழ மன்னர் தான். கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவிபாடும் என்பதற்கினங்க அம்பிகாபதி மிகவும் காவிய திறமை வாய்ந்தவனாகவே வளர்கிறான். அம்பிகாபதியும், அமராவதியும் காதல் கொண்ட விடயம் கம்பன் அறிந்த போது தள்ளாடுகிறான், அல்லாடுகிறான்.

மன்னரின் காதிற்கு விடயம் போனால் பேராபத்து விளையும் என்பதை அறிந்து கொண்ட கம்பன் அம்பிகாபதியிடம் காதலை கைவிடுமாறு கோரிக்கை விடுகிறான். மேலே எழுதிய காதல் வகைகளில் ஒன்றை குறிக்க மறந்து விட்டேன், அது பொருந்தா காதல். அமராவதிதான், அம்பிகாபதியை காதல் புரிந்து இருக்க வேண்டும், காதல் புரிய தூண்டி இருக்க வேண்டும். அரச பரம்பரையில் வந்தவர்கள் அரச பரம்பரையில் தான் திருமணம் முடிப்பார்கள் என்பது எழுதப்படாத நியதி.

இந்த காதல் விடயம் ஒட்டக்கூத்தனுக்கு தெரிய இதுதான் தக்க தருணம் என குலசேகர இளவரசனுடன் இணைந்து கொண்டு பல திட்டங்கள் தீட்டுகிறான், ஒவ்வொன்றிலும் தப்பிக்கிறான் அம்பிகாபதி.

காதல் என வந்துவிட்டால் அனைவரும் கவிஞர்களாகி விடுவார்கள். ஆனால் கவிஞன் இங்கே காதலனாகி நிற்கிறான். காதல் ரசம் சொட்ட சொட்ட அமராவதியை சிலாகித்து கவிதைகள் பொழிகிறான். ஆண்டாள் கூட தான் காதல் ரசம் சொட்ட சொட்ட ரங்கநாதன் மீது கவிதைகள் எழுதினாள். இந்த கவிதைகளே அம்பிகாபதிக்கு எதிரிகள் ஆகின.

சோழ மன்னருக்கு விடயம் ஒட்டகூத்தன் மூலம் சென்றடைகிறது. கம்பர் மீதான மரியாதையில், கம்பரின் வேண்டுகோளுக்கிணங்க அம்பிகாபதியை நாடு கடத்த உத்தரவு இடுகிறார் மன்னர். புஷ்பக தீவுக்கு செல்லும் வழியில் சென்ற கப்பல் உடைந்து அதில் கிடைத்த மரக்கட்டையின் மீதேறி செண்பக தீவு அடைகிறான் அம்பிகாபதி. உறையூரில் நடக்கும் விடயம் அவனது காதுக்கு எட்டுகிறது. புகழேந்தி புலவரின் மகள் கண்ணம்மாவின் மூலம் அமரவாதியை சந்திக்க ஆயத்தம் செய்கிறான் அம்பிகாபதி. காதலின் வலி, அவனை அமராவதியை அழைத்துக் கொண்டு ஓடி செல்ல தூண்டுகிறது. அவ்வாறு திரும்பி வந்து அழைத்து செல்லும் தறுவாயில் இருவரும் பிடிபடுகிறார்கள்.

இந்த முறையும் கம்பர் மீதான மரியாதையில், அமராவதி அடம்பிடித்ததில் இருந்து அம்பிகாபதி கொல்லப்படுவதில் இருந்து மீட்கப்படுகிறான். சோழ மன்னரோ கவிதைக்கு பெரும் மரியாதை தருபவர், அதன் காரணமாக அம்பிகாபதி நூறு பாடல்கள் புறம் பற்றி, அதாவது போர், அரசியல் குறித்து பாடினால் தனது பெண்ணை மணமுடிக்க சம்மதம் சொல்கிறார், அப்படி இல்லாத பட்சத்தில், கொல்லப்படுவாய் என அரசர் அரசாணை இடுகிறார். காதல் பற்றி ஒரு பாடலும் பாடக் கூடாது என்கிறார். கம்பர் அச்சம் கொள்கிறார். பெண்ணின் மீது காதல் இருக்குமிடத்து புறம் தெரிவது இல்லை. அம்பிகாபதியை மிகவும் எச்சரித்து அனுப்புகிறார். ஒட்ட கூத்தனோ தனது திட்டம் தவிடு பொடியாகிவிட்டதே, தனக்கு நிகரான ஒரு புலவனின் மகன் இளவரசனா? என எப்படியாவது இந்த காதல் கரைசேர விடக் கூடாது என திட்டம் தீட்டுகிறான்.

அரச சபை கூடுகிறது. பாடல் பாட ஆரம்பிக்கிறான் அம்பிகாபதி. ஒன்று இரண்டு என தொன்னூற்றி ஒன்பது வந்தாகிவிட்டது. அனைவரும் அமைதியாய் இருக்க, வாழ்த்து பாவுடன் இணைத்து நூறு என எண்ணிக்கொண்டு காதலில் திளைத்த அமராவதி, அம்பிகாபதி முன் சென்று வெற்றி களிப்பில் நிற்கிறாள். நூறாவது பாடலை அவள் அழகை பாடி முடிக்கிறான் அம்பிகாபதி. ஒட்டக்கூத்தன் எழுகிறான், நூறு பாடல்கள் சொன்னபடி பாடவில்லை என ஆதாரத்துடன் காட்டுகிறான். அரசர் இதை காரணம் காட்டி அம்பிகாபதியை கழுவில் ஏற்றுகிறான். அமராவதியும் உடன் இறக்கிறாள்.

கம்பர் மிகவும் சமயோசிதமாக நடந்து கொண்டும் தனது மகனின் காதலை கைகூட வைக்க முடியவில்லை. கம்பர் இந்த காதலை பொருந்தா காதல் என்றே எண்ணினார். இன்றைய காலகட்டத்தில் காதல் எதிர்ப்பு பெருகி இருக்க, அன்றைய கால கட்டம் இதைவிட சற்று மோசமாகவே இருந்து இருக்க கூடும். கிட்டத்தட்ட ஆயிரம் வருடங்கள் முன்னர் அரங்கேறிய நிகழ்வு இது. அதுவும் அரசரின் மகள்.

போட்டிகள் வைத்தே மணம் முடித்து வைக்கும் பாங்கு அன்றையகாலத்தில் இருந்து இருக்கிறது. அம்பிகாபதியின் காதல் ஒரு காவியமாகி போனது. இந்த நிகழ்வுகளை வைத்தே 'பெண் புத்தி பின் புத்தி' என சொல்லப்படுவது உண்டு. அதாவது செய்து முடித்த பின்னர் யோசிப்பது. இந்த அம்பிகாபதி குறித்து இரண்டு முறை தமிழ் சினிமா குறித்து வைத்துள்ளது. இரண்டுமே மாபெரும் வெற்றிப் படங்கள். ஒன்று தியாகராஜா பாகவதர் நடித்தது, மற்றொன்று சிவாஜி கணேசன் நடித்தது.

கம்பரின் நிலையில் இருந்து இந்த நிகழ்வை எல்லாம் அசை போடும்போது மனம் மிகவும் அதிகமாகவே வலிக்கிறது. கம்பன் காதலுக்கு எதிரியா, அம்பிகாபதி?

## கலைக் கதிர்



# ஆயரின் பெயரில் அமைந்து அரும்பணியில் 'பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்' நிறுவனம்

## யாழ் ஊடக அமையத்துடன் இணைந்து புதிய ஊடகப்பணிகள் – 07

- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்
இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

**யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை பெயரிலே பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் அமைந்துள்ளது.**
**பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் தொடக்கப்பட்ட கதை - அதற்கு ஓய்வு நிலை ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் பெயர் கொடுக்கத் தூண்டப்பட்ட காரணம் மற்றும் அதன் பணிகளைத் தொடர்ந்து விளக்குகிறது இக்கட்டுரை.**

அண்மைக் காலமாக காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழில் அதிக படங்களை இணைத்திருந்தேன். இவ்வாறு அதிக படங்களை இணைத்தமையால் கடந்த 07 ஆண்டு காலமாக வெளியிடப்பட்டு வரும் காலைக் கதிர் கிறிஸ்தவ செய்தி இதழுக்கு என்றுமில்லாதவாறு அதிக அழைப்புக்கள் உள்நாட்டில் இருந்தும் வட்ஸ்அப் மூலமாக வெளிநாடுகளில் இருந்தும் வந்துள்ளன. இவ்வளவு காலமும் செய்து வந்த இந்தப் பணிக்கு ஒரே வாரத்தில் சம்பாவனை கிடைத்தது போல் மகிழ்ந்தேன்.

பெரிய கட்டுரையைக் கஷ்டப்பட்டுப் படிக்காமல் படங்களை பார்த்து இலகுவாக விடயங்களை புரிந்து கொள்ள காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்கள் விரும்புகிறார்கள் போலும்.

இன்றைய நவீன சமூக ஊடகங்களின் வெற்றிக்கு

2003ஆம் ஆண்டு புனித வளனார் கத்தோலிக்க அச்சகத்தை ஆயர் திறந்து வைத்த போது எடுக்கப்பட்ட படம். படத்தில் கத்தோலிக்க அச்சகத்தை வடிவமைத்த திருவாளர் தனசிங்கம் அவர்களுடன் கத்தோலிக்க அச்சக அதிபர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகள்...



ரி.ஜிம்பிறவுண் அடிகளார் காணாமல் போனமை (20 ஓகஸ்ட் 2006); ஜி.ஏ.பிரான்சிஸ் யோசவ் அடிகளார் காணாமல் போனமை (18 மே 2009); எம்.எக்ஸ்.கிளி கருணாரட்ணம் அடிகளாரின் கண்ணி வெடித் தாக்குதல் மரணம் (12 ஏப்ரல் 2008); இறுதிப் போரில் எம்.ரி.சறத் ஜீவன் அடிகளாரின் அதிர்ச்சி மரணம் (18 மே 2009) யாழ் மறை மாவட்டத்தை பிறப்பிடமாகக் கொண்டு மன்னார் மறை மாவட்டத்தில் இணைந்து பணியாற்றிய எம்.பாக்கிய றஞ்சித் அடிகளாரின் கிளேமோர் தாக்குதல் மரணம் (26 செப்டெம்பர் 2007); வங்காலை பங்கில் பணியாற்றிய யாழ் மறை மாவட்டத்தைச் சேர்ந்த எம்.மேரி பஸ்ரியன் அடிகளார் சுட்டுக்கொல்லப்பட்டமை (06 ஜனவரி 1985) என்ற மறக்க முடியாத சோக நிகழ்வுகள்.

இதுவே முக்கிய காரணம். இனி வருங்காலங்களில் அதிக படங்களை இணைப்போம்.

இதில் எனது படங்கள் அதிகமாய் இருப்பது இவ்வாக் கத்தின் தன்மைக்கேற்ப தவிர்க்கப்பட முடியாதது என்ப ததை புரிந்து கொள்ளுங்கள். ஏற்கனவே

2008ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக புலமைப்பரிசிலுடன் இங்கிலாந்து நாட்டிற்கு கலாநிதிப்பட்ட ஆய்வுக் கல்விக்குச் செல்ல முன்னர் சுவீடன் நாட்டு போஜோ ஊடக அமைப்பினர் அப்போதைய யாழ்ப்பாணம் ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையுடன்.....

கட்டுமானப் பணிகள்

(5) வேறு எந்த ஆயரும் அனுபவிக்காத கொடிய அனுபவத்தின் வழி பயணப்பாதை

((6) தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் ஆளுமை

(7) மன்னார் - யாழ்ப்பாண மறைமாவட்டங்களில்



யூசிப் என அழைக்கப்படும் சர்வதேச கத்தோலிக்க மாநாட்டில் 1997ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் கலந்து கொண்ட போது....

1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது நடந்த

1999ஆம் ஆண்டு புனித வளனார் கத்தோலிக்க அச்சகத்தை கட்டுவது தொடர்பான கலந்துரையாடல் ஜேர்மன் நாட்டு தேவையில் இருக்கும் ஆலயத்திற்கு உதவி என்ற அமைப்பினருடன் நடைபெற்றபோது கத்தோலிக்க அச்சக வளாகத்தில்.....

முடித்திருந்தேன்.

### 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது நடந்த அந்த சம்பவம்



1997ஆம் ஆண்டு வத்திக்கான் வானொலிக்கு 'பாதுகாவலன்' பத்திரிகை ஆசிரியராக ஒரு பேட்டி வழங்கிய பின்னர். படத்தில் உரோமாபுரியில் கல்வி கற்றுக் கொண்டிருந்த சந்திரபோஸ் குறூஸ் அ.ம.தி. அடிகளார் - பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் - வத்திக்கான் வானொலி தமிழ்ப்பகுதிப் பொறுப்பாளர் இந்தியா தமிழ் நாட்டைச்சோந்த அருட்சகோதரி - உரோமா புரியில் கல்வி கற்றுக் கொண்டிருந்த ஜெயறஞ்சன் அடிகளார்

நான் நிதியாளராகப் பணியாற்றி வந்த கொழும்புத் துறை புனித சவேரியார் குருமடக் குடும்பத்துடன் மிருசுவிலுக்கு இடம்பெயர்ந்தோம். நான் ஒரு சிறிய குழுவினருடன் அவரிக்காட்டில் தங்கியிருந்தேன். பின்னர் கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்து அங்கு குருமடத்தை இயக்குவோம் என அப்போது குருமட அதிபராக இருந்த எஸ். ஜே.இம்மானுவேல் அடிகளார் முடிவெடுத்தார். பல இடங்களிலும் பரந்திருந்த குருமட சகோதரர்களை இணைத்துக் கொண்டு கிளிநொச்சி ஆரோகணம் இல்லத்தில் குருமடத்தை இயக்கிய சில மாதங்களில் ஆயரிடம் இருந்து தன்னை மிருசுவிலில் வந்து சந்திக்கும் படி ஓர் அழைப்பு வந்தது.

நான் குருமட நிதியாளராக இருந்தமையால் நிதி பற்றிய அடுத்த நகர்வுகளையும் உணவுப் பொருள்களை எப்படி எல்லாம் பெறலாம் என்பது பற்றியும் கலந்துரை

2003ஆம் ஆண்டு புனித வளனார் கத்தோலிக்க அச்சகத்தை ஆயர் திறந்து வைத்த பின்னர் கட்டடக் குழுவினருடன் எடுக்கப்பட்ட படம்.



1997ஆம் ஆண்டு வத்திக்கானில் அப்போதைய திருத்தந்தை தற்போதைய புனிதர் 2ஆம் யோவான் போல் அவர்களைச் சந்தித்தபோது

இடம்பெயாந்து மிருசுவிலில் அமைக்கப்பட்ட தற்காலிக ஆயர் இல்லத்தில் ஆயர் தங்கி இருந்தார். காலை 11 மணி இருக்கும். அவருக்கு முன்னால் நான் அமர்ந்து இருந்து பேசிக் கொண்டிருந்தேன். ஆயர் அந்தக் கடின காலத்திலும் மகிழ்வான ஒரு செய்தியைச் சொன்னார்.

நீர் குருவாகி இந்த ஆண்டு பத்து ஆண்டுகளை நிறைவு செய்துள்ளீர். குருமட நிதியாளராக ஓடித்திரிந்து சரியாகக் கஷ்டப்பட்டுள்ளீர். ஒரு மாதம் பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு ஒரு பயிற்சிக்கும் போய் வாரும். நான் எல்லா ஒழுங்கும் செய்துள்ளேன் என்றார். மகிழ்வாக இருந்தாலும் இந்தக் கடின காலத்திலும் எனது பத்து ஆண்டு குருத்துவ ஆண்டு நிறைவை நினைந்தும் எனக்கு ஒரு பயிற்சியோடு கூடிய விடுதலையைத் தந்திருக்கிறாரே என்ற வியப்பே மேலோங்கி இருந்தது.

அப்போது போல் றோகான் அடிகளார் கதவைத் தட்டி விட்டு உள்ளே வரும்படியான அழைப்பிற்குக் காத்திரா




2007 - 2011 ஆண்டுகாலப் பகுதியில் லண்டன் செபீட்கலாம் பல்கலைக்கழக ஊடக ஆய்வுக் கல்வியின் போது பல்கலைக்கழக கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தில் பணியாற்றிய போது பொறுப்பாளர் அருட்சகோதரி ஆன் லீ மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுடன்

(2001ஆம் ஆண்டு பாதுகாவலன் பத்திரிகையின் 125ஆவது ஆண்டு நிறைவில் விழா மலரை பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியர் ரூபன் மரியாம் பிள்ளை அடிகள் அப்போதைய யாழ்ப்பாணம் ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகைக்கு வழங்கிய போது...




என்று சொல்லி விட்டு, ஆயர் என்ன என்று கேட்க நேரமே தராமல் யோண் லொறற் அடிகளார் நோயினால் இறந்து விட்டார் என்றார்.

'மை கோட்...' என்றவர் பின்னர் எதுமே பேசவில்லை.



2007 - 2011 ஆண்டுகாலப் பகுதியில் லண்டன் செபீட்கலாம் பல்கலைக்கழக ஊடக ஆய்வுக் கல்வியின் போது பல்கலைக்கழக கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தில் பணியாற்றிய போது பொறுப்பாளர் அருட்சகோதரி ஆன் லீ மற்றும் செபீட்கலாம் மறைமாவட்ட ஆயருடன்.

அப்படியே அதிர்ந்து போனார். மாயான அமைதி நிலவியது. அவர் உள்ளத்தை சோகம் இறுகப் பற்றிக் கொண்டது. அந்த அமைதியைக் குழப்பாமல் அப்படியே மெதுவாக எழுந்து சத்தம் இடாமல் வெளியே வருவதற்குக் கதவை நோக்கி நடந்தேன். போல் றோகான் அடிகளாரும் அப்படியே நகர்ந்தார்.

இறுகி அடைத்துப் போன குரலில் என்னை நோக்கி 'உம்மிடம்தான் சவேரியார் குருத்துவக் கல்லூரி வான் இருக்கிறது. அதில்தான் லொறற் அடிகளாரின் உடம்பை ஏற்ற வேணடும். பார்த்து உதவி செய்யும்' என்றார்.

அப்போது பிறதராக இருந்த லியோ ஆம்ஸ்றோங் அடிகளார் லொறற் அடிகளாரைக் கதிரையில் இருப்பது போல் வான் பின் சீற்றில் இருத்தி தன்னோடு அணைத்து வைத்திருக்க சவேரியார் குருத்துவக் கல்லூரிக்குச் சொந்தமான வானில் ஏற்றி கொண்டு வந்தோம்.

மறுதினம் செம்பியன் பற்றிற்கும் அதே வானில் கொண்டு சென்றோம். அந்த சோகத்தின் உச்சக்கட்டமான நேரத்திலும் - பதற்றமின்றி - இறை சித்தத்தை ஏற்று - எவ்வளவு வேகமாக சிந்தித்தார் - செயற்பட்டார் என வியந்து போனேன். **(தொடரும்....)**

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘காலைக்கதிர்’ வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-92

**சிவநாயகத்தின் மீள் வரவு**

பிரபாகரனும் பாலசிங்கமும் புதுடில்லியில் ராஜீவ் காந்தியுடனான சந்திப்பின் பின் யாழ்ப்பாணம் வந்தபோது அங்கு பெரிய அளவிலான வரவேற்புகள் அளிக்கப்பட்டன. அவற்றின் போது இடம் பெற்ற விடயங்களாலும், பிரசாரங்களாலும், விடுதலைப் புலிகள் இடையிடையே உதிர்த்த கருத்துகளாலும் எல்லோருடைய எண்ணங்களிலும் எழுந்த பெருத்த கேள்வி விடுதலைப் புலிகள் ஒப்பந்தத்தை ஏற்று நடத்த முன்வருவார்களா என்பதுதான். அத்தோடு ஆயுதங்களை அவர்கள் கையளிப்பார்களா என்பதும் பலரின் ஆதங்கமாகவும் இருந்தது.

இக்கட்டத்தில் இந்தியாவின் புலனாய்வுப் பிரிவினர், ‘றோ’ அதிகாரிகள், மாநில அரசுகளின் (முக்கியமாக தமிழ்நாடு) புலனாய்வு அமைப்பினர், ஸ்ரீலங்காவின் புலனாய்வு அமைப்பினர், போராளிகள் குழுக்களின் முகவர்கள் எனப் பலர் அன்றைய நேரத்தில் அந்த ஏரியில் மீன் பிடிக்க கொக்குகள் போல ஒற்றை காலில் நின்று கொண்டிருந்தார்கள். இவர்களில் பலர் தாங்கள் இயங்கிய பகுதியின் மேல் அதிகாரிகளைத் திருப்தி படுத்தக்கூடிய மீன்களுக்காகவே காத்திருந்தார்கள். அன்றில் தங்களுக்குச் சாதகமாக மீன் வரவில்லை என்றால் அப்படி ஒரு மீனே அந்த ஏரியில் கிடைக்காது என்ற தகவல்களையே தந்து கொண்டிருந்தனர்.



ரணில், ரவி ஜெயவர்த்தன, மஹிந்த சமரசிங்க ஆகியோர்

அந்தப் பின்னணிகளில், ஒப்பந்தம் பற்றி எவ்வளவு ஆதங்கங்கள் தமிழ் மக்களின் அபிலாசைகளை ஒட்டி எழுந்திருந்தாலும், அந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற எண்ணமும் ஆர்வமும் நிலத்திலும் புலத்திலும் இருந்தன.

தமிழர் தகவல் நிலையத்துக்கு நாட்டில் அனுசரணையாக இயங்கிய அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் இயக்குநர்கள் பலரும் ஏற்பட்ட சந்தர்ப்பத்தை தவறவிடாது விடுதலை புலிகள் ஆயுதங்களைக் கையளித்து, ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதை விரும்பினர். அதையொட்டி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளும் கலந்துரையாடல்களும் நடத்தினர்.

அதில் ஓர் அங்கமாக தமிழர் தகவல் நிலையம் சிவநாயகத்தை சென்னையில் இருந்து நேரடியாக யாழ்ப்பாணத்திற்குப் பேச்சுவார்த்தைகளுக்கு அனுப்பியது. அவரைப் பலாலிக்குத் தங்களது விமானத்தில் அழைத்துச் சென்றவர்கள் ‘றோ’ அமைப்பினர். அவரை ஏற்றிச் சொல்லவோ அல்லது திருப்பிக் கூட்டிப் போகவோ பாஸ்போர்ட், விசா பிரச்சனைகள் ஏற்படுத்தப்படவில்லை.

அவரைப் பலாலியில் சந்தித்து



சிவநாயகம்

அழைத்துப் போனவர்கள் விடுதலைப் புலிகளின் தளபதிகள்.

பின்னர் புலிகளது திருநெல்வேலி தலைமையகத்தில் சந்திப்புகளும் பேச்சுக்களும் நடந்தன.

அவர், சமூக அமைப்புக்கள், பொது மக்கள் எனப் பல தரப்பினருடனும் அவர்களின் எதிர்பார்ப்புகள், உணர்வுகள் குறித்துப் பேசி எங்களுக்கு உடனடியாக மிகவும் சுருக்கமாக அனுப்பிய தகவல் விடுதலைப் புலிகளுக்கு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த விடும் எண்ணமில்லை. அவர்கள் ஆயுதங்களைக் கையளிக்க விரும்பவில்லை. ஆகவே மேலும் அழுத்தங்கள் தரப்பட வேண்டும் என்பதுதான். சுருக்கமாக ஆங்கிலத்தில் அழகாக 'You can consider the accord is dead, although born' என்றுதான் செய்தி தந்தார்.

இதனைப் போல பல உளவுத்துறைகளில் குழப்பமான, முரண்பாடான மீன் பிடிப்புகள் இடையேதான் ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதற்கான ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அதற்கான கலந்துரையாடல்கள் விடுதலைப் புலிகளின் தலைவர்கள், ஆதரவாளர்கள், அவர்களின் புத்திஜீவிகள் எனப் பலருடன் நடந்துதான் பிரபாகரனை சுதுமலைப் பிரகடனத்திற்கு ஈடுபாடு கொண்டயாபேரும் தயார்ப் படுத்தினார்கள்.



இலங்கைப் படைகளுடன் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி

இவை நடந்து கொண்டிருந்த போது ஜனாதிபதி ஜே.ஆருடன் ஒப்பந்தத்தை ஒட்டி முரண்பட்ட அமைச்சர் குழாமும் அதில் முக்கியமாக பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் மரத்தில் கழுகுகள் போல கவனித்துக் கொண்டே இருந்தனர்.

அவர்களது உளவில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க மாட்டார்கள், ஒப்பந்தத்தை தங்களுடைய மேலோங்கிய அதிகாரத்துக்காக நடைமுறைப்படுத்த விட மாட்டார்கள் என்ற தரவுகளே இருந்தன.

ஆயினும் நிலைமையை எப்படிக் குழப்புவது என்ற கருத்தும் பாதுகாப்பு அமைச்சரினதும் அவரின் கீழ அமைந்த இராணுவத்திடமும் இருந்தது.

ஸ்ரீலங்கா தரப்பில் ஒப்பந்தத்தின் சரத்துகளை நாடாளுமன்றத்தின் ஆமோதிப்புக்குச் சமர்ப்பிக்காது, ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அவரது நடைமுறை அதிகாரங்களைப் பாவித்து ஏற்றுக்கொண்டு, பின்னர் ஆறுதலாக நாடாளுமன்றுக்குத் தெரியப்படுத்தலாம் என்ற தனிப்பட்ட உடன்பாடும் இருந்தது.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின் நாட்டுக்குள் இந்தியப் படைகள் உள்ளிடும் என்பது ஜே.ஆருக்கும், மகாவனி அமைச்சர் காமினி திஸாநாயக்காவுக்கும் மாத்திரமே தெரிந்திருந்தது. மற்ற அமைச்சர்கள் – முக்கியமாக நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் லலித் அதுலமுதலி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பாதுகாப்பிற்கான ஜனாதிபதியின் ஆலோசகர் (ஜனாதிபதி ஜே.ஆரின் மகன்) ரவி ஜெயவர்த்தனா, இராணுவத்தின் கூட்டுப் பொறுப்பில் தலைமை அதிகாரிகள் – யாருமே ஒப்பந்தத்தை ஒட்டி என்ன நடக்கிறது என அறிந்து கொள்ளவில்லை. ஒப்பந்தத்தின் சாரங்கள் யாவைஎன்பதுஅதுகையெழுத்திடப்படும் வரை அவர்களுக்குத் தெரிவிக்கப்படவும் இல்லை.

ராஜீவ் காந்தி கையெழுத்திட வந்த சமயம் பிரதமர் பிரேமதாஸா, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, லலித் அத்துலத் முதலி, காமினி ஜயசூரிய போன்றோர் அதன் வைபவத்திற்கோ, அதன்பின் நடைபெற்ற தேநீர் விருந்துக்கோ கூட சமுகம் தரவில்லை.

ஜே.ஆர. அதற்கு வருவதற்காக தனது மகன் ரவியிடம், ‘ராஜீவ் ஒரு பண்பான மனிதர், நீயும் கூட அப்படித்தான். உனக்கு ஏதும் அதிருப்திகள் இருந்தால் அவற்றை அவரிடமே நேரடியாகச் சொல்லலாம். ஆனால் வராமல் விடாதே’ என விநயமாகக் கேட்டும் அவரது மகன் தேநீர் விருந்துக்குப் போகவில்லை.

ஒப்பந்தத்திற்கு முட்டுக்கட்டைகள் வந்து பின்னர் விடுதலை புலிகள் இந்தியப் படைகளுடன் போர் தொடங்கியதும் (இன்னொரு புறத்தில் விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களைய இந்திய படைகள் Operation Pawan தொடங்கியதும்) இந்தியாவில் இயங்கிய தமிழர் தகவல் நிலையம், சிவநாயகம் அதற்கு அனுசரணையாக இயங்கிய யாபேரும் சென்னை புலன் விசாரணையாளர்களாலும், மத்திய அரசின் உளவுத்துறைகளாலும் குறி வைக்கப்பட்டார்கள். அவற்றைத் தொடர்ந்து பார்க்கலாம்.

(வளரும்)



இந்தியப் படைகள் தரையிறக்கம்